க்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 19 வெள்ளிக்கிழமை (01-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:68

# நிரந்தரப் போர்நிறுத்தம் 2 விடயங்களால் தாமதம்!

## கடற்போக்குவரத்து, போராளிகளின் நடமாட்டம் இவை தொடர்பாக இணக்கம் காண்பதில் இழுபறி

யாழ்ப்பாணம்,பெப்ரவரி 1

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிரந்தர யுத்தநிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் இரு விடயங்களில் தடங்கல் படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.**

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக அறிவித்த ஒருமாத யுத்த நிறுத்தமும் அரசுத் தரப்பு அறிவித்த ஒருமாத மோதல் தவிர்ப்பும் மேலும் ஒவ்வொரு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டு எதிர்வரும் 24ஆம் திகதியுடன் காலாவதியாக உள்ளன.

அதற்கு முன்னர் இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்றைச் செய்வதற்கான ஏற்பாடுகள் நோர்வேயின் முன் முயற்சியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த உடன்படிக்கையில் இடம்பெறவேண்டிய இரண்டு விடயங்களிலேயே இழுபறிநிலை காணப்படுகிறது. அவை வருமாறு:-

- கடல் மார்க்கத்திலும் யுத்தநிறுத்தத்தை விஸ்தரித்து கட்டுப்பாடற்ற கடல்போக்குவரத்தை அனுமதித்தல்.
- படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பிரதேசத்திலும் விடுதலைப் புலிகள் நடமாடுவதைத் தடை செய்யாதிருத்தல்.

இந்த இரண்டு விடயங்களிலும் இணக்கம் தெரிவிப்பதற்கு அரசு பின்னடித்து வருதாகத் தெரிகின்றது. ஆனால் இவற்றில் புலிகளும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

"கடல் மார்க்கத்தில் கட்டுப்பாடின்றி எமது (2ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் ஆலோசகராக பாஸ்கரலிங்கம்

கொழும்பு,பெப்.1

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் ஆர்.பாஸ்கரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கொள்கை வகுப்பு, அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சின் விடயங்களில் பிரதமருக்கு ஆலோசனை வழங்குவார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரமதாஸாவின் மறைவின் பின்னர் லண்டனில் வசித்து வந்த இவர் தற்பொழுது கொழும்பு திரும்பி இப்பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார்.

(ஐ-10)

## மலையகத் தலைவருக்கு கொழும்பில் அசிட் வீச்சு!

கொழும்பு,பெப்.1

மலையகத்தில் இ.தொ.காவுக்கு எதிராக கடந்த தேர்தலில் போட்டியிட்ட தேசிய தொழிற்சங்கத் தலைவர் எஸ்.ஏ.கந்தசாமி அசிட் வீச்சுக்கு இலக்கானார்.

டாம்பலப்பிட்டியில் உள்ள அவரது சங்க அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் அவர் பணியாற்றிக் கொண்டிருந்த சமயம் இனந்தெரியாதோர் அவர்மீது அசிட்டை வீசியுள்ளனர்.

காயமடைந்த நிலையில் அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஒ-3)

## இரண்டாவது நாளாக நேற்றும் மீனவர்கள் மறியற் போர்!

### யாழ். செயலகம் வெறிச்சோடியது

யாழ்ப்பாணம்,பெப்.1

குடாநாட்டுக் கடற்பரப்பில் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்குமாறும் -

தற்போது விதிக்கப்பட்டிருக்கும் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அகற்றுமாறும் கோரி -

குடாநாட்டு மீனவர்களால் யாழ். செயலகம் முன்பாக நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட மறியற்போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்றும் யாழ். செயலகத்தின்முன் ஒன்று கூடி காலை முதல் பிற்பகல் வரை மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் யாழ்.செயலகத்துக்குள் செல்ல முடியாது ஊழியர்களும், பொதுமக்களும் திரும்பிச் சென்றனர்.

மீனவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு சாதகமான பதில் (14ஆம் பக்கம் பார்க்க)

## பாதை திறக்க புலிகள் சம்மதம்; இப்போது முடிவு அரசின் கையில்

### ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் யாழ்.ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் இணைக்கும் தரைவழிப்பாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் தமது சம்மதத்தையும் நல்லெண்ணத்தையும் தெரிவித்துள்ள நிலையில், இப்போது பாதை திறப்பதற்கான முடிவினை எடுக்கின்ற பொறுப்பு அரசிடமே உள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்றுத் தான் அனுப்பிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் யாழ்மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடபகுதி வாழ் மக்கள் யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் இணைக்கும் தரைவழிப்பாதை இல்லாமையால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். இத்தரைவழிப்பாதை திறக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பல தடவைகளில அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அழுத்தம் கொடுத்து வந்துள்ளோம்.

அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளோம். பாதுகாப்பு காரணங்களுக்காக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாமலே காலம் கடந்து விட்டது.

புதிய அரசு பதவியேற்று சமாதான நடவடிக்கைகளில் அதிக ஆர்வம் கொண்டு போர் நிறுத்தத்தையும் அதன் வழி இயல்பு நிலையை ஏற்படுத்த முற்படுகின்ற வேளையில் இவ்வாண்டுக்கான புத்தாண்டுச் செய்தியிலும் பாதை திறப்பதன் அவசியத்தை மேலும் வலியுறுத்தி இருந்தோம்.

கப்பல் மூலமாகவும், விமானம் மூலமாகவும் பயணம் செய்வதற்கு பயணச் சீட்டுக்களை பெற்றுக்கொள்வதில் நாள்கணக்காய் காத்திருக்கவும், தரகர்களுக்கு பணம் கொடுக்கவும் வேண்டியுள்ளது. விமான பயணத்துக்காக அதிக பணத்தை [illegible] (14ஆம் பக்கம் பார்க்க)

## விமானங்களின் பாதுகாப்புக் கருதி

## பலாலியை அண்டிய கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கமுடியாது!

### யாழ்.தளபதி அமைச்சரிடம் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.1

பலாலி படைத்தளத்தை அண்டிய கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்க முடியாது என்று யாழ்மாவட்ட படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

[illegible]திக்கம் முதல் தொண்டமனாறு வரையான கடற்பகுதியில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடைதொடர்பாக பலாலி படைத் தளபதியுடன் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடிய அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன கலந்துரையாடினார்.

பலாலி விமானத்தளத்துக்கு வந்திறங்கும் விமானங்களுக்கு கடற்பகுதியில் இருந்து பாதுகாப்பு வழங்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக அந்தப் பிரதேசத்தில் மீன்பிடிக்க அனுமதிக்க முடியாது என்று யாழ். மாவட்டத் தளபதி அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

மீன்பிடிக்க விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை நீக்கக்கோரி குடாநாட்டு மீனவர்கள் பெரும் மறியற் போராட்டத்தை நடத்தி வருவது தெரிந்ததே.

(ஐ-3)

## பொலீஸ்மா அதிபரின் பதவிக் காலம் நீடிப்பு

## ஜனாதிபதியின் முடிவை எதிர்த்து மனுத் தாக்கல்!

கொழும்பு,பெப்.1

அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவின் பதவிக்காலத்தை நீடிப்பதென ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானத்தை எதிர்த்து மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலீஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 12 பேர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

பொலீஸ்மா அதிபர், உள்துறை அமைச்சர், ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொலீஸ் மா அதிபரின் பதவிக் காலம் இன்று முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் பற்றியும் இவர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

அமைச்சரவையின் அங்கீகாரத்தோடு பொலீஸ்மா அதிபராகப் புதிய ஒருவரை உள்துறை அமைச்சு நியமிக்க வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது.

(ஐ-8)

## ரத்னசிறி பெயரில் ராஜினாமாக் கடிதம்

கொழும்பு,பெப்.1

எதிர்க்கட்சித் தலைவர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளதாக நேற்று பிற்பகல் நாடாளுமன்ற சபாநாயகர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட 'பக்ஸ்' கடிதம் ஒன்று பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கையெழுத்துப் பிரதியாக அமைந்துள்ள இந்த 'பக்ஸ்' செய்தியில் பிரதமர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டதற்கான முத்திரைகள் எதுவும் காணப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் தற்போது வெளிநாட்டில் உள்ளதால் அந்தப் பதவிக்கான சர்ச்சைகள் மேலும் தீவிரம் அடையும் அறிகுறியாகவே இக்கடிதம் காணப்படுவதாகக் கருதப்படுகிறது.

(ஒ-8)

## அமைதித் தீர்வு காண [illegible]து வரலாற்று வாய்ப்பு!

### [illegible]டுதலைப் புலிகள்' இதழ் கருத்து

வவுனியா,பெப்.1

[illegible]மிழ் மக்களின் தேசியப் பிரச்[illegible] அமைதி வழியில் அரசியல் [illegible]காணும் வரலாற்று வாய்ப்பு மீண்டும் ஒரு முறை சிங்கள அரசுக்குக் [illegible]டைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலி[illegible]' பத்திரிகை மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளது.

நேற்று வெளியான அந்தப் பத்திரிகையில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்காவில் புதிய அரசு பதவியேற்று சிலநாள்களில் புலிகள் இயக்கம் ஒருமாத கால யுத்தநிறுத்தத்தை அறிவித்தது. அதனை அனுசரித்து அர (14ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் மற்றும் விமானம் மூலம்:

## அனுமதியின்றி பொருள்களை எடுத்துவர விரைவில் வசதி

கொழும்பு,பெப்.1

கொழும்பில் இருந்து கப்பல் மற்றும் விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறை இன்னும் இரு வாரங்களில் நீக்கப்பட்டுவிடும்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஒரு தினங்களில் வெளியிடப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

குடாநாட்டு மக்கள் எதிர்நோக் (14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மீன்பிடித் தடையை நீக்காவிடில் மறியற் போராட்டம் விஸ்தரிப்பு!

## மீனவர் சமாசத் தலைவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.1

குடாநாட்டுக் கடற்றொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை அரசு ஏற்க மறுத்தால் தற்போது யாழ். செயலகம் முன்பாக இடம்பெறும் மறியற் போராட்டத்தை தமிழர் வாழும் பிரதேசங்கள் முழுவதற்கும் விஸ்தரிக்க நேரிடும்.

இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டு மீனவர்கள் கடலில் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து யாழ்.செயலகத்தை நேற்றுமுன்தினம் தொடக்கம் ஸ்தம்பிதமடையச் செய்துள்ளோம்.

**வறுமையின் பிடியில்**

குடாநாட்டு மீனவர்கள் மிகவும் ஏழ்மையான நிலையில், தமது குடும்பங்களைக் கொண்டு நடத்தமுடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் எம்மால் முன்னெடுக்கப்பட்டுள்ள சாத்வீகப் போராட்டத்திற்கு அரசுத் தரப்பு உடனடியாகப் பதில்தர வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமது போராட்டத்திற்குப் பதில் தருவதற்கு அரசு காலதாம்தம் செய்வதையோ சாக்குப்போக்குச் சொல்வதையோ ஏற்கமுடியாது.

**போராட்டம் விஸ்தரிப்பு**

எமது போராட்டம் இன்றும் நாளையும் யாழ்.செயலகம் முன் தொடர்ந்து நடக்கும். எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் எமக்குச் சாதகமான பதிலை அரசு தராவிட்டால் எமது மறியற் போராட்டம் விஸ்தரிக்கப்படும்.

ஏனைய மக்களின் ஆதரவையும் நாம் திரட்டி பிரதேச செயலகங்களின் முன்னும் மறியற்போராட்டத்தை விஸ்தரித்து அவற்றையும் ஸ்தம்பிதமடையச் செய்வோம். எமது இந்தப் போராட்டத்திற்குச் சாதகமான பதில் கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிட வேண்டாம் என்றும், எமது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் பல அமைப்புகள் எமக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளன.

எமது போராட்டத்தை விஸ்தரிக்க நேரிடின் நாம் அனைவரது ஆதரவையும் திரட்டி அரசின் பதில் சாதகமாகக் கிடைக்கும் வரை போராடியே தீருவோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மீன்பிடிப்பதற்கான தடை மற்றும் கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பாக விடுதலைப் புலிகள் மற்றும் இந்தியத் தரப்புடன் ஆலோசித்த பின்னரே இது தொடர்பாக அரசு முடிவெடுக்கும் என வெளியான செய்திகள் குறித்து எஸ்.தவரட்ணம் கருத்துக் கூறுகையில்,

**அரசு நாடகமாடுகிறது**

விடுதலைப் புலிகள் எமது விடுதலைக்காகப் போராடுபவர்கள். கடல் தடைச் சட்டம் நீக்கப்பட்டு நாம் நிம்மதியாகக் கடலில் மீன்பிடிக்க அரசு அனுமதித்தால் எம்மை விடவும் மகிழ்வடையக் கூடியவர்கள் விடுதலைப் புலிகள்தான். அவர்களிடம் மீன்பிடித் தடைச்சட்டம் பற்றிப் பேசப்போவதாகக் கூறிக் கடல் தடைச்சட்டத்தினை விடுதலைப் புலிகள் அமுல்படுத்தியிருப்பது போல் அரசு நாடகமாடுகிறது.

கடல் தடைச்சட்டத்தை நீக்க வேண்டியதன் அவசியத்தினை விடுதலைப் புலிகள் பலகாலமாகவே வலியுறுத்தி வந்துள்ளனர். இப்போது இது சம்பந்தமாக விடுதலைப் புலிகளிடம் பேசவேண்டுமெனக் கூறுவதை சாக்குப்போக்குச் சொல்லி எமது போராட்டத்தினை முறியடிக்க எடுக்கும் முயற்சியாகவே கருதவேண்டியுள்ளது.

**இந்தியாவுடன் பேச்சு ஏன்?**

மீன்பிடித் தடைநீக்கம் தொடர்பாக இந்திய அரசுடன் பேசவேண்டுமெனத் தெரிவித்திருந்தமை எமக்கு வேதனையையும் ஆத்திரத்தையும் ஊட்டும் செயலாக உள்ளது. எமது பிரதேசத்திற்குள் வந்து மீன்பிடிக்கும் இந்திய றோலர்கள் செய்யும் அட்டூழியங்கள் சொல்லில் அடங்காதவை. அப்படியிருக்கும்போது எது சம்பந்தமாக இந்திய அரசுடன் பேச வேண்டும். எமது கடற்பரப்பிற்குள் நாம் மீன்பிடிக்க முதலில் அரசு அனுமதிக்கட்டும். பின்னர் இந்திய மீன்பிடிப்படகுகள் எமது பிரதேசத்துக்குள் மீன்பிடிக்க வருவதையும், அவர்கள் எமது வலைகளையும் மீன்களையும் அபகரிப்பதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது பற்றி யோசிக்கட்டும்.

எமது ஏழை மீனவர்களுக்கு மேலும் துன்பங்களைக் கொடுக்காது எமது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கட்டும். அதை விடுத்து மீனவர்கள் போராட்டத்தினை கொச்சைப்படுத்துவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதால மேலும் அழுத்தங்களை கொடுக்கும் செயற்பாடுகளில் நாம் இறங்கவேண்டி வரும் - என்று அவர் தெரிவித்தார். (ஓ-6-ரி)

# யாழ். – கொழும்பு விமானசேவை நாளை இடம்பெறமாட்டாது

## பயணிகளுக்கு மாற்று ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.1

கொழும்பு - யாழ்ப்பாணம் பயணிகள் விமான சேவை நாளை சனிக்கிழமை இடம்பெறமாட்டாது என்று 'ஹெலிரூர்ஸ்' நிறுவனத்தின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

சேவையில் ஈடுபடும் விமானத்தில பாரிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்றும் -

இதன் காரணமாக விமான சேவை நிறுத்தப்படுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனவருத்தத்தைத் தெரிவிப்பதாகவும் -

யாழ். அலுவலகப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

நாளை பயணம் செய்வதற்கு பயணச்சீட்டுப் பெற்றவர்களுக்கு விசேட பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி - முதலாவது சேவையில் பயணச்சீட்டுப் பெற்றவர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை ஐந்தாவது சேவையிலும் -

இரண்டாவது சேவையில் பயணச்சீட்டுப் பெற்றவர்களுக்கு எதிர்வரும் 5ஆம் திகதி ஐந்தாவது சேவையிலும் -

மூன்றாவது சேவையில் பயணச்சீட்டுப் பெற்றவர்களுக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி ஐந்தாவது சேவையிலும் - நான்காவது சேவையில் பயணச்சீட்டுப் பெற்றவர்களுக்கு எதிர்வரும் 7ஆம் திகதி ஐந்தாவது சேவையிலும் - பயணம் செய்ய இடமளிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த ஐந்தாவது சேவையில் செல்வதற்கு குறிப்பிட்ட தினங்களில் பிற்பகல் 4 மணிக்கு யாழ்.சிங்கள மகாவித்தியாலத்துக்கு பயணிகள் சமுகம் தரவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

ஐந்தாவது சேவை பலாலியில் இருந்து இரவு 10.15க்கு இடம்பெறவிருக்கிறது. (ஓ-3)


# தென்மராட்சி மக்களுக்கான அறிவித்தல்

அனைத்து தென்மராட்சி மக்களினதும் நலன்காப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று எதிர்வரும் 03.02.2002 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் அவர்களும் இக்கூட்டத்திற்கு வருகை தரவுள்ளார்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

- நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்.

(210)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

*1.1.2002 அன்று கனடாவில் சிவபதமடைந்த*

அமரர்

**திரு.S.R.கதிரவேற்பிள்ளை**

(பெரியகடுக்கன்)

அவர்களின்

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!



*109, இராசாவின் தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

திரு.S.R.பஞ்சாட்சரம்
(சின்னக்கடுக்கன்)
திரு.S.R.பாலசுந்தரம்
திருமதி சிவகங்கை முத்துலிங்கம்

(C-20578)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.1

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மருதனார்மடத்தில தற்காலிகமாக இயங்கும் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராகத் தெல்லிப்பழைக் கோட்ட இளைப்பாறிய உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினராக யூனியன் கல்லூரி முன்னாள் அதிபர் நா.கந்தசாமியும் கலந்து கொள்கின்றனர். (ஓ-6)

★ ★ ★

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் மற்றும் அச்செழு மெ.மி.த.க. பாடசாலை ஆகியவற்றின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள மைதானத்தில் இடம்பெறவிருக்கின்றன.

வித்தியாலய அதிபர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெறும் இந்தப்போட்டியில் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.(ஓ-3)

★ ★ ★

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் - யாழ். மாவட்ட ஆசிரியர்களிடையே சதுரங்க, வலைப்பந்தாட்டப் போட்டிகளை நடத்தவுள்ளது.

சதுரங்கப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதலும் -

வலைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9மணி முதலும் -

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. (ஓ-3)

★ ★ ★

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் சென்.ரோக்ஸ் வி.கவும் கொழும்புத்துறை ஜெற்லைனர்ஸ் வி.கவும் மோதுகின்றன. (ஓ-3)

# நேரத்தை இழுத்தடிக்காமல் சாட்சியை விசாரிக்க வேண்டும்!

## மதனராஜனுக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.1

வழக்குடன் தொடர்புடைய விடயங்கள் குறித்தே சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யவேண்டும். தேவையற்ற கேள்விகளைக் கேட்டு காலத்தை இழுத்தடிக்கக்கூடாது.

நாரந்தனையில் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு உறுப்பினாகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையில் 2ஆவது எதிரியான என்.மதனராஜனை யாழ்.நீதிவான் இவ்வாறு எச்சரித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்ற தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு உறுப்பினர்களை தாக்கிக் காயப்படுத்தியமை இரு உறுப்பினர்களைக் கொலை செய்தமை உட்பட 29 குற்றச்சாட்டுக்களின்பேரில் ஈ.பி.டி.பியின் இராணுவப் பொறுப்பாளர் நெப்போலியன் (செபஸ்ரியன் ரமேஸ்), ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் என்.மதனராஜன், ஈ.பி.டி.பி உறுப்பினர் ஜீவன் ஆகியோர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விசாரணை முதலாவது சாட்சி சமுகமளிக்காத நிலையில் யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் மீண்டும் நேற்று ஆரம்பமானது.

இந்த வழக்கின் முதலாவது சாட்சியான ரெலோ பிரமுகர் என்.கே. விந்தனை குறுக்கு விசாரணை செய்ய 2ஆம் எதிரிக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

சிறிய நேரம் அவரைக் குறுக்கு விசாரணை செய்த மதனராஜன், தனக்கு சுகவீனம் காரணமாக தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்ய முடியாது எனத் தெரிவித்ததை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. ஆனால் தேவையற்ற காலதமாதத்தை ஏற்படுத்தக்கூடாது என்று நீதிமன்றம் அவரை எச்சரித்தது. இந்த வழக்கில் 34 சாட்சிகள் சாட்சியம் அளிக்க வேண்டியுள்ளது. சாட்சிகளிடம் வீணான கேள்விகளைக் கேட்டு காலத்தை இழுத்தடிக்க வேண்டாம். விரைவாக வழக்கு விசாரணையை முடிக்க வேண்டும் என்பதால் தேவையற்ற கேள்விகளைக் கேட்கக்கூடாது என்று நீதிவான் மதனராஜனை எச்சரித்தார்.

மேல் விசாரணை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-3-6)

# சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம்,பெப்.1

தென்மராட்சி தனங்களப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற தவறுதலான கிரனேட் வெடிப்பில் சிப்பாய் ஒருவர் பலியானார். மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

அரச தகவல் திணைக்களம் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

காயமடைந்த சிப்பாய் பலாலி இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச்சென்ற சாவகச்சேரி பதில் நீதிவான் விசாரணை நடத்தினார்.(ஐ-117)

# பொருள்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.1

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணை பிரதேச செயலர் பிரிவு மாதர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியற் பொருள்காட்சி நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30மணிக்கு அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.(ஓ-3)

# நிரந்தரப் போர்நிறுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்கள் தொழில் செய்ய வேண்டும். அத்தோடு யுத்தநிறுத்தம் தரை, வான், கடல் என்று மூன்று பரப்பிலும் மேற்கொள்ளப்படுகின்ற வரையறை மற்றும் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட - ஓர் ஒட்டுமொத்த இணக்கத்தின் அடிப்படையில் ஏற்பட வேண்டும். அரைகுறைச் சந்தேகங்களுடன் கூடிய இணக்கநிலை பயன்தரப்போவதில்லை" - என்று புலிகளின் அரசியல் துறைத் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறுகின்றார்.

ஆனால் இராணுவக் கட்டுபாட்டில் உள்ள தமிழ்ப்பிரதேசங்களுக்கு புலிகள் தங்கு தடையின்றி போய்வர அனுமதித்தால் அங்குள்ள இளைஞர்களை புலிகள் தமது இயக்கத்துக்கு ஆள் திரட்டிக் கொள்வார்கள் என்றும் -

கடல்வழிப் போக்குவரத்தை கட்டுப்பாடின்றி திறந்துவிட்டால் புலிகள் ஆயுதங்களை தடையின்றிக் கொண்டு வந்து குவித்து விடுவார்கள் என்றும் -

அரசுத் தரப்பு அஞ்சுகின்றது. அதன் காரணமாகவே இந்த விடயங்களில் இணக்கம் தெரிவிக்க அரசுத் தரப்பு தொடர்ந்து மறுத்து வருகின்றது.

இது குறித்து புலிகளின் மூத்த தலைவர் ஒருவர் உதயனுக்கு தெரிவித்ததாவது:-

"யுத்தநிறுத்த காலத்தில் நாங்கள் ஆள் சேர்க்காமலும், ஆயுதங்களை கொண்டு வந்து சேர்க்காமலும் இருப்பதற்காகவே அரசு இது விடயத்தில் பின்னிற்பதாகக் கூறப்படுகின்றது. அது உண்மை என்று வைததுக் கொண்டால்கூட இந்த யுத்தநிறுத்த காலத்தில் அரசு ஆள் திரட்டலைச் செய்யாமலா இருக்கப் போகிறது?

"ஆயுதங்களை கொண்டுவந்து குவிக்காமலா இருக்கப்போகிறது?

இரண்டையும் செய்யத்தானே போகின்றது?

யுத்தநிறுத்தம் நடைமுறையில் இருப்பதால் இந்த இரண்டையும் முழுமூச்சில் செய்வதற்கு அரசுக்கு முழு வசதி. அத்தோடு யுத்தத்துக்கு செலவிடும் பணத்தை இந்த இரண்டு விடயங்களுக்கு மட்டுமே அரசு செலவிடப்போகின்றது.

"ஆக, இந்த இரண்டு விடயங்களிலும் யுத்தநிறுத்தம் என்ற பேரில் எங்கள் கைகளைக் கட்டிவைத்துக் கொண்டுதான் மட்டும் அவற்றைச் செயற்படுத்தி நன்மைபெற அரசு முனைகின்றது.

"தான் விரும்பும் காலம்வரை யுத்தநிறுத்தத்தை நீடித்து எங்கள் கைகளைக் கட்டிவைத்துக்கொண்டு தாங்கள் தேவையான அளவு ஆள் திரட்டலையும் ஆயுதச் சேகரிப்பையும மேற்கொண்ட பின்னர் மீண்டும் யுத்தத்தை அரசு ஆரம்பிக்குமானால் நமது நிலை என்னவாகும்?

எனவே யுத்தநிறுத்த ஏற்பாடுகள் திட்டவட்டமானதாகவும் தீர்க்கமானவையாகவும் இருக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அத்தகைய உடன்பாடு ஏற்படும் என நாம் முழுமையான நம்பிக்கையோடு காத்திருக்கின்றோம்" - என்றார் அவர். (ஐ)

# மரண அறிவித்தல்

## திருமதி முத்தம்மா செல்லத்துரை

இணுவில் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது உடுவில் தெற்கு யாமாச் சந்தியில் வசித்தவருமான திருமதி முத்தம்மா செல்லத்துரை நேற்று (31.01.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் இராசலிங்கம் (ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்), காலஞ்சென்ற வேதநாயகி, அன்னபூரணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் சீவரத்தினம், இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் சரோஜாதேவி, சத்தியதேவி, ரகுநாதன், குகநாதன், சகிலாதேவி, இரத்தினரூபி, கலாரூபன், பிரதீபன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'யாமாச்சந்தி',*
*உடுவில் தெற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
செ.இராசலிங்கம் (மகன்)
(ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்)

(211)

# சப்பாத்துக் குண்டுதாரியினால் அமெ. விமான நிலையத்தில் பீதி

நியூயோர்க்,பெப்.1

அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோ விமானநிலையத்தில் சப்பாத்துக் குண்டுதாரி ஒருவரினால் பெரும்பீதி ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் விமானநிலையத்துக்கு வந்த பயணிகளின் பாதணிகளை 'ஸ்கானிங்' முறை மூலம் சோதனையிட்டுக் கொண்டிருந்த அதிகாரிகள் பயணி ஒருவரின் பாதணிக்குள் வெடி பொருள்கள் இருந்ததற்கான சமிக்ஞைகளைக் கண்டனர். ஆனால் அந்த நபரை அணுகி அதிகாரிகள் விசாரணை நடத்துவதற்கு முன்னர் அந்த நபர் மக்கள் கூட்டத்துக்குள் நுழைந்து மறைந்துவிட்டார்.



உடனடியாக விமானநிலையத்தின் 30 வாயிற் கதவுகளும் பயணிகள் வெளியேறாதவாறு மூடப்பட்டன.

பின்னர் மூன்று மணி நேரமாக அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர். ஆனால் குறிப்பிட்ட சந்தேக நபரை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

சந்தேக நபர் சுமார் 40 வயது மதிக்கத்தக்க வெள்ளையர் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து சான்பிரான்ஸிஸ்கோ விமான நிலையத்தில் பெரும்பீதி நிலவி வருகின்றது. பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. சோதனைகளும் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர், சோதனைக் கெடுபிடிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பவற்றை மீறி எவ்வாறு தப்பிச் சென்றார் என்பது குறித்தும் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

மற்றொரு புறத்தில் சந்தேக நபர் இன்னமும் விமான நிலையத்தில் மறைந்துள்ளாரா என்பதைக் கண்டு பிடிக்கும் முகமாகவும் சோதனைகள் நடைபெறுகின்றன. (ம)

# அமெரிக்க இராணுவத்தினர் பிலிப்பைன்ஸில் தரையிறக்கம்!

## பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அடுத்த நடவடிக்கை



நேற்று ஆரம்பமான கூட்டுப் பயிற்சியை ஆரம்பித்து வைத்த அமெரிக்க இராணுவ கேணல் வில்லியம் போலையே படத்தில் காண்கிறீர்கள். பின்னணியில் அமெரிக்க மற்றும் பிலிப்பைன்ஸ் படையினர் காணப்படுகின்றனர்.

மணிலா,பெப்.1

அமெரிக்காவும் பிலிப்பைன்ஸும் இணைந்து தீவிரவாதத்துக்கு எதிரான யுத்தப் பயிற்சிகளை பிலிப்பைன்ஸில் ஆரம்பித்துள்ளன. இதற்கென அமெரிக்கப் படையினர் அங்கு தரையிறங்கியுள்ளனர்.

உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் ஆப்கானிஸ்தானுக்கு வெளியே ஆரம்பிக்கப்படும் முதலாவது நடவடிக்கை இது என அமெரிக்கா அறிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸில் பிரிவினை கோரிப் போராடிவரும் அபு ஸயிவ் தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் பிலிப்பைன்ஸ் இராணுவத்துக்கு உதவுவதற்காகவே அமெரிக்க இராணுவம் அங்கு சென்றுள்ளது. ஏற்கனவே 650 அமெரிக்க இராணுவத்தினர் அங்கு தரையிறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அபு ஸயிவ் தீவிரவாதிகளுக்கு ஒஸாமா பின்லேடனுடன் தொடர்புகள் இருப்பதாலேயே இந்த விடயத்தில் அமெரிக்கா தலையிட்டதாக வாஷிங்ரன் கூறுகின்றது.

இதனால் அபு ஸயிவ் தீவிரவாதிகளை அழிப்பதற்கு அமெரிக்கா பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றும் வாஷிங்ரன் தெரிவித்துள்ளது. ஆனால "தீவரவாதிகளுக்கு எதிரானபோரில் பிலிப்பைன்ஸ் இராணுவமே நேரடியாக ஈடுபடும். அமெரிக்கத் துருப்பினர் அவர்களுக்குப் பயிற்சிகளையும், உதவிகளையும் மட்டுமே செய்வார்கள்" - என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா அரோயா தெரிவித்தார்.

தீவிரவாதிகள் அமெரிக்கப்படையினரைத் தாக்கினால் அவர்களும் நேரடிப் போரில் ஈடுபடக்கூடும் என்றும் அவர் சொன்னார்.

இதனடிப்படையிலேயே இரு இராணுவமும் கூட்டாக இணைந்து நேற்றுப் பயிற்சிகளை ஆரம்பித்தன. பிலிப்பைன்ஸின் தெற்கு நகரமான ஸம்பொன்காவில் உள்ள விமானப் படைத்தளத்திலேயே இப்பயிற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

இதேவேளை -

அமெரிக்கப் படைகள் மீண்டும் பிலிப்பைன்ஸுக்குள் வந்துள்ளதை அங்குள்ள பெரும்பான்மையான மக்கள் எதிர்த்துள்ளனர். அமெரிக்கத் துருப்பினரின் வருகையை எதிர்த்து புதனன்று தலைநகர் மணிலாவில் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.




அமெரிக்கப் படையினரின் வருகையை எதிர்த்து மணிலாவில் ஆர்ப்பாட்டம் நடத்தும் இளைஞர்கள்.

நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் திரண்டு அமெரிக்க தூதரகம் முன்பாக அமெரிக்கக் கொடியை எரித்தனர். (ம)

## மாணவர்களை வலைக்குள் வீழ்த்தி

# பேராசிரியரின் பாலியல் லீலைகள்; வீடியோ திருடனிடம் சிக்கியது!

றோம்,பெப்.1

இத்தாலியச் சட்டத்துறைப் பேராசிரியர் ஒருவர் பாலியல் துர்நடவடிக்கையில் ஈடுபட்டதைப் பதிவு செய்திருந்த வீடியோ ஒளி நாடா ஒன்றை திருடன் ஒருவன் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளான்.

இஸ்பியோ கபிஸானோ (வயது 66) என்ற அந்தப் பேராசிரியர் கிழக்கு இத்தாலிய கமரினோ பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத் தலைவராகப் பணியாற்றுகின்றார்.

பேராசிரியர் தனது மாணவர்களுடன் பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டிருந்த காட்சி அந்த வீடியோ நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர். ஆனால் அந்த வீடியோ நாடா எப்படித் திருடனின் கைகளை எட்டியது என்று பொலீஸார் கூறவில்லை. தன்னுடன் பாலியல் துர்நடத்தையில் ஈடுபடும் மாணவர்களுக்கு சட்டப் பரீட்சையில் அதிக புள்ளிகள் வழங்கப்படும் என்று பேராசிரியர் உறுதி அளித்துவந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தை அடுத்து பல்கலைக்கழக நிர்வாகம் பேராசிரியரை பணியில் இருந்து இடைநிறுத்தியுள்ளது. நிர்வாகத்தினரும் பொலீஸாரும் இது குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் சட்டத்துறை மாணவர்களின் வெளிச் செயற்பாடுகள் பதிவு செய்யப்பட்ட வீடியோ நாடாவை வைத்துக்கொண்டு பேராசிரியர் மீது பொலீஸார் அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர் என்று கபிஸானோவின் வழக்கறிஞர் தெரிவித்தார். (ம)

இந்திய தேசிய மனித உரிமைகளின் இணையத்தைச் சேர்ந்தவர்கள் அண்மையில் தலைநகர் புதுடில்லியில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம் இது.

தீவிரவாதத்துக்கெதிரான போர் என்ற பெயரில் அமெரிக்காவும் இந்தியாவும் நிகழ்த்திவரும் மனித உரிமை மீறல்களை கண்டிக்கும் வகையில் அமெரிக்க அதிபர் புஷ்ஷும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்யும் மகுடி வாசிப்பது போன்று இருவர் வேடமிட்டிருப்பதை காணலாம். பாகிஸ்தான் அதிபரின் படத்தையும் ஒருவர் தாங்கியுள்ளார்.




## தமது கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி

# அமெரிக்க செய்தியாளரின் உயிருக்கு தீவிரவாதிகள் 24 மணி நேரக் கெடு

இஸ்லாமாபாத்,பெப்.1

தங்களது கோரிக்கைகளை இன்னும் 24 மணி நேரத்துக்குள் நிறைவேற்றாவிட்டால் தாம் கடத்தி வைத்துள்ள அமெரிக்கப் பத்திரிகையாளரைக் கொன்றுவிடப் போவதாக பாகிஸ்தானில் இருந்து இயங்கும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.




இது தொடர்பாக பாகிஸ்தானியப் பத்திரிகைகளுக்கு அந்த அமைப்பு ஈ-மெயில் மூலம் செய்திகளை அனுப்பிவைத்துள்ளது.

☆பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் அனைவரும் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறவேண்டும்.

☆குவாண்டனாமோ சிறையில் அடைக்கப்பட்டுள்ள தலிபான் மற்றும் அல்கெய்டா கைதிகளை அமெரிக்கா நல்லமுறையில் நடத்த வேண்டும்.

☆பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் தலிபான் தூதுவரை உடன் விடுவிக்கவேண்டும்.

- ஆகிய மூன்று கோரிக்கைகளை உடன் நிறைவேற்றாவிட்டால் துப்வசம் இருக்கும். அமெரிக்காவின் 'வோல் ஸ்ரீட்' பத்திரிகைச் செய்தியாளரான டானியல் பெரலரைச் சுட்டுக்கொல்லப்போவதாக அந்த ஈ-மெயில் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரல் கடந்த வாரம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டிருந்தார். அவர் கடத்தப்பட்டதற்கு ஆதாரமாக அவரது தலையை தீவிரவாதி ஒருவர் பிஸ்ரலால் குறிபார்த்து நிற்கும் புகைப்படம் ஒன்று தீவிரவாதிகளால் வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால் தீவிரவாதிகளின் இந்த மிரட்டல்களுக்கெல்லாம் தான் பயப்படப்போவதில்லை என்று பெரலின் மனைவியான மேரியான தெரிவித்துள்ளார். மேரியானாவும் ஒரு பத்திரிகையாளரே. அவர் தற்போது கர்ப்பமாக இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில்: -

பெரலின் கடத்தல் தொடர்பாக முஸ்லிம் தீவிரவாத அமைப்பு ஒன்றின் தலைவரைப் பாகிஸ்தான் பொலீஸார் கைதுசெய்துள்ளனர். ஜமாட் அல் - புக்ரா என்ற அமைப்பின் தலைவரான முபாரக் அலிஷா கிலானியே கைது செய்யப்பட்டவராவார். இவரைச் சந்தித்துப் பேட்டியெடுப்பதற்காகச் சென்றபோதே பெரல் காணாமற் போயிருந்தார்.

"பெரலைக் கொன்றுவிடுவோம் என்று தெரிவித்த ஈ-மெயில் செய்தி எங்களுக்கு அனுப்பப்படவில்லை. ஆனால் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்ட அதன் பிரதியை நாம் பார்த்தோம்" - என்றார் கராச்சி நகர பொலீஸ் அதிகாரி ஒருவர். "பெரலின் கடத்தல் தொடர்பாக எமக்குக் கிடைக்கும் தகவல்களுக்கு ஏற்ப நாம் உடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த விடயத்தில் நாம் மிகவும் சிரத்தை எடுத்துப் பணியாற்றுகின்றோம்" - என்றும் அவர் சொன்னார். (ம)

## அகுபங்சர், ஹோமியோபதி சிகிச்சை

**(ACUPUNCTURE, HOMEOPATHY)**

"எயிட்ஸ்" நோய் நிலைமை உட்பட அனைத்து நோய் நிலைமைகளும் நீரிழிவு (Diabetes), ஆஸ்த்மா (Asthma), புற்றுநோய் (Cancer), இருதய நோய்கள் (Heart Disease), சிறுநீரக நோய்கள் (Kidney dissorders), மன அழுத்த நோய் (Mind Depression), வாத நோய்கள் போன்ற அனைத்து நோய் நிலைமைகளும் எளிமையாக, முழுமையாக (பூரணமாக) குணமாக்கமுடியும் என்பது ஆணித்தரமான உண்மையாகும். புற்றுநோய் என சந்தேகமான நிலைமையில் உள்ள நோயாளிகள் எங்கள் சிகிச்சைமுறை மூலம் குணமடைய விரும்புபவர்கள் தயவுசெய்து "பயொப்சி"க்கு அனுமதி வழங்கவேண்டாம் (புற்றுநோய்க் கட்டியின் ஒரு பகுதியை வெட்டிப் பரிசோதித்தல்)

எங்கள் சிகிச்சையில் நோயின் பெயர் (ABCD, EFGH--------- Etc) முக்கியமில்லை நாடிப்பரிசோதனை மூலம் நோய் நிலைமையின் மூலகாரணத்தைத் துல்லியமாகக் கண்டறி வோம்.

### பரந்துபட்ட பொதுமக்களின் நன்மைகருதி

மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்ட முக்கியமான தகவலைத் தெரிவிக்கின்றோம். அதாவது இன்றுவரை "மூளைக்காய்ச்சல்" நோய் நிலைமைக்கு "எப்போலா வைரஸ்" என்றும், "சிங்கப்பூர் வைரஸ்" என்றும், "பிலிப்பைன்ஸ் வைரஸ்" என்றும் காரணங்களை அடுக்கிவந்தார்கள். இன்று "எப்போலா வைரஸ்" காரணமல்ல எனவும், அத்துடன் உடலைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் தோற்றுவிக்கப்படுகின்ற நோய் அறிகுறிகளை அமுக்குவதற்காக வழங்கப்படுகின்ற ஆங்கில மருந்துகளே காரணம் எனவும் இப்போது உண்மையை ஒப்புக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

*ஆதாரம்* : JAMA
(JOURNAL OF AMERICAN MEDICAL ASSOCIATION)
Int. Med. 1999 (P:1185 - 1194) JAMA.

**டாக்டர் க.றகுறாம்**
மே/பா டாக்டர் வை.கதிரவேலு
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (மடத்தடி)

சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் தவிர மற்றைய நாள்களில்
காலை 6.00 – 11.00
மாலை 3.00 – 7.00 மணிவரை

(தென்னிலங்கையில்)
**டாக்டர் A.சாந்தகுமார்**
72/4, லிபர்டி பில்டிங்,
டன்பார் றோட், ஹற்றன்.

(கொக்குவிலில்)
**ஆர்.சிவலிங்கம்**
இரட்ணம் அவெனியூ,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
வியாழன்
மாலை 5.00 - 8.00 மணிவரை.

(182)


## மீண்டும் சொந்த இடத்தில்

அல்லாரை வீதி, மீசாலையில் இயங்கி வந்த விக்னேஸ்வரா அரிசி ஆலை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

உரிமையாளர்:
அ. பாலசிங்கம்.

*மீசாலை.* (167)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 04 - 1983 | 01 - 02 - 2000 |

### ஜோய் கவின்சன் பேனாட்

*(பரியோவான் கல்லூரி மாணவன்)*

*நெஞ்சம் துடிக்குது*
*நினைவைச் சுமக்கையில்...*
*விம்மி வெடிக்குது*
*பிரிவை நினைக்கையில்...*
*இடை நடுவில் பிரிந்துவிட்ட*
*இனிய நண்பனே - நீ*
*நீங்காது நிறைந்திருப்பாய்*
*எம் நினைவில் என்றுமே!*

பிரிவால் துயருறும்:
பரியோவான் கல்லூரி, O/L பிரிவு - (99)
மாணவர்கள், நண்பர்கள்.

(C/20565)

## நீங்காத நினைவுடன்
## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06 ◊ 05 ◊ 1931 | 02 ◊ 02 ◊ 2001 |

### அமரர் அந்தோனி செபஸ்ரியன்

(01.02.2002)

*"சீவியத்தில் நேசித்தவர்களே*
*மரணத்திலும் மறவாதீர்கள்."*

வையகத்துள வாழ்வாங்கு வாழ்ந்து வானிலுறை தெய்வமே!
ஆண்டோ ஒன்றாகின்றது; நம்மனதிலே வேதனையோ விலகவில்லை.
நாம் வளமாக வாழ்கின்றோம் - ஆனால் வழிசமைத்த நீரோ இங்கில்லை
விழிகள் தேடும் இடம் எல்லாம் உந்தன் விம்பம் தானே தெரிகிறது.

*உங்களது ஆன்மா இறைவனில் இளைப்பாற*
*தினமும் வேண்டுகின்றோம்.*

என்றும் மறவாத நினைவுடன்:
மனைவி, மக்கள்,
மருமகள், பேர்த்திமார்.

*14/1, புதுமைமாதா கோவில்*
*மேற்கு வீதி, குருநகர்,*
*யாழ்ப்பாணம்.* (176)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1936 - 08 - 02 | 2002 - 01 - 02 |

திருமதி
### பொன்னையா இராசம்மா

கடந்த மாதம் ஜேர்மனியில் புருச்சால் நகரில் காலமான இவரது இறுதிநாள் அஞ்சலி நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிப்பதுடன், அவரது இல்லத்தில் இன்று (01-02-2002) வெள்ளிக்கிழமை நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மக்கள், மருமக்கள்,
சகோதரர், பெறாமக்கள்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (174)

## யாழ்.இந்துவில் சித்திரக கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ். இந்துக்கல்லூரி கவின் கலை மன்றத்தின் நான்காம் ஆண்டு விழாக் கலை நிகழ்வும் சித்திரக் கண்காட்சியும் இன்று வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சற்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் 155 ஆவது ஆண்டு ஆராதனை விழாவும் தொடர்ந்து நடைபெறும். (க-6)

## 376 பேருக்கு அச்சுவேலி சங்கம் கடன் உதவி

வலி.கிழக்கு,பெப்.1

வலிகாமம் கிழக்கு வட பகுதி அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம் கடந்த ஆண்டு 376 பயனாளிகளுக்கு 22 லட்சரூபாவை சுழற்சிமுறைக் கடனாக வழங்கியுள்ளதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சங்கத்தின் எல்லைக் குட்பட்ட கால்நடை, விவசாயம், சிறுகைத் தொழில் போன்ற துறைகளில் ஈடுபட்டு வருவோருக்கே இந்தக்கடன் உதவி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவத்தின் (UNDP) உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-180)

## சந்நிதியில் வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.1

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் நடத்தும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ். நாச்சிமார் கோயிலடி சைவப் புலவர் "கவிமணி" இராசையா ஸ்ரீதரனின் 'சூர்மா மடியத் தொடு வேலவனே' என்னும் பொருளில் சொற்பொழி வாற்றுவார்.

பண்டிதர் க.முத்துவேலு அறிமுகவுரையை நிகழ்த்துவார். (க)

## ஹிந்தி மொழி திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு சுபைதா (ZUBEIDAA) என்ற ஹிந்தி மொழித் திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

புவியியற்றுறை மண்டபத்தில் திரையிடப்படவுள்ள இந்தத் திரைப்பட நிகழவில் ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்களின் 'ஒளியை நோக்கி' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-6)

## கலைஞானி நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.1

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் கலைஞானி ஆ.செல்வரத்தினத்தின் நினைவுக் கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் எஸ்.நடராஜன் தலைமையில் நடைபெறும் நினைவஞ்சலிக் கூட்டத்தின் இறுதியில் குரும்பசிட்டிப் பகுதியில் வசிக்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கவும் ஏற்பாடாகியுள்ளது. (க-ரி)

G.A.Q.2002, 2003,
B.A.-2002
(யாழ்., பேரா.)
தமிழ்: க.தர்மராஜா
*ஆரம்பம்:*
*02. 02. 2002 – 8. 00a.m.*
**NEWTON**
ஆரியகுளம்சந்தி அருகாக
ஏனைய பாடங்களும்
நடைபெறுகின்றன. (185)



சாமியே சரணம் ஐயப்பா

## கோண்டாவில் கிழக்கு சபரீச ஐயப்ப தேவஸ்தானம்

நாளை (02.02.2002) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஐயப்பசுவாமிக்கு விஷேட அபிஷேகபூசை, பஜனை நடைபெற்று கடந்த சபரிமலை மகரஜோதி தரிசனத்தை தரிசித்து, 18 படி கடந்து ஐயப்ப சுவாமிக்கு நெய் அபிஷேகம் செய்து வழிபட்டு வந்த எங்கள் குருசாமி பிரம்மஸ்ரீ வி.ஹரிஹரசுதசாமி அனைவருக்கும் சபரிமலை ஐயப்பனின் திருவருள் பிரசாதமும், நூலும் வழங்குவார். 2002ஆம் ஆண்டு ஐயப்பனின் பக்திப் பாடல்கள் அடங்கிய வீடியோ, ஓடியோ ஒலிப்பதிவு நாடாக்களை விரும்பியவர்கள் எம்மிடம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

*சாமி சரணம்!*

தலைவர்
பிரம்மஸ்ரீ தா.வாசுதேவக்குருக்கள்

(164)

லண்டன் சிவயோகம் அன்னையர் குடியிருப்பு இல்லங்கள் வழங்கலுக்கான

## நேர்முகப் பரீட்சை

நாள் : 02.02.2002 சனிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி. கந்தரோடை சுன்னாகம்.

*விண்ணப்பித்தவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.*
*உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.*

நம்பிக்கைப் பொறுப்பாளர்,
*மேற்படி அறக்கட்டளை சார்பாக*

(186)

## எழுதுவினைஞர் தேவை

க.பொ.த.(உ/த) சித்தியடைந்த பெண்கள் 07.02.2002, 08.02.2002ஆம் திகதிகளில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு நேரில் சமுகம் தரவும். கணனி பிரயோக அறிவு மேலதிக தகைமையாகும்.

யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(188)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30 - 10 - 1916 | 02 - 01 - 2002 |

### அமரர் மரிசலின் ஞானப்பிரகாசம்

*(ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட்)*

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமானவரே!
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

*38, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (178)

## துயர் பகிர்கின்றோம்

அன்பு, கருணை, நேர்மை, கடமை தவறாமை
யாவும் ஒருங்கே அமையப்பெற்ற

### கனவான் செல்லப்பா செந்தில்நாதன்

*(மின் பொறியியலாளர், இலங்கை மின்சாரசபை)*

அவர்களின் திடீர் மறைவையிட்டு நாம் துயர் பகிர்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆத்மா சாந்தி அடைவதாக.

- G.B.GROUP CO.
*மானிப்பாய் மில்ஸ், சுதுமலை.*

(183)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை

(சந்தைக்கடை உரிமையாளரும், பிரபல ஒப்பந்தகாரரும்)

நெடுந்தீவு மேற்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை அவர்கள் நேற்று (31.01.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - சின்னப்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் ரதிதேவி (ஆசிரியை), கேதீஸ்வரன் (ஆசிரியர்), சந்திரேஸ்வரன் (கனடா), குலதேவி (கனடா), சரோஜாதேவி (ஆசிரியை), ஜெகதீஸ்வரன் B.Sc. (கண்டி), குகனேஸ்வரன் (லண்டன்), உலகேஸ்வரன் (சந்தைக்கடை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஜீவரெட்ணம் (கிராம சேவையாளர்), நளாயினி (ஆசிரியை), மாலா (கனடா), தர்மசீலன் (கனடா), சோதிராஜா (ஆசிரியர்), கிருஷ்ணகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பேரம்பலம் (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் கமலாவதி, பரமலிங்கம், இலட்சுமணன் (ஓய்வூதியர், தொழில் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிரோஷி, சரண்யா, ஹிசோபன், ஜனுசன், ஹரீசன், பிரார்தனா, பிரியங்கா, சாரங்கா, அருளங்கா, துஷியங்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2002) வெள்ளிக்கிழமை இல.46, புளியங்குளம், திருகோணமலை இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க.இலட்சுமணன்
(மைத்துனர்)

*44/1, விதானையார் வீதி,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.* (175)

உதயன்

## சந்தேகப்போக்கு சமாதானத்தைத் தராது!

குடாநாட்டு மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்காகத் தரைவழிப்பாதை ஒன்றைத் திறக்க எந்தவித முன் நிபந்தனையுமின்றி தலைவர் பிரபாகரன் இணங்கியிருக்கிறார். ஆனால் அரசுத் தரப்போ தொடர்ந்தும் மௌனம் சாதித்து இந்த விடயத்தை இழுத்தடித்து வருகிறது.

பொதுமக்கள் பொது அமைப்புகளுடன் இணைந்து குரல் எழுப்பி - அரசுக்கு அழுத்தம் கொடுத்து - யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப்பாதையை வற்புறுத்தியாவது திறக்கச் செய்ய வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

சமாதானப் பேச்சுக்கான நல்லெண்ணப் புறச் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய பிரதானமான செயற்பாடுகளில் ஒன்று இந்தப் பாதை திறப்பு விடயம் முக்கியமானது - முன்னுரிமை கொடுக்கப்படவேண்டியது - என்பதை அனைவருமே ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த விடயத்தில் அரசு அக்கறையின்றி - மெத்தனப்போக்குடன் - நடந்துகொள்வதாகப் புலிகள் தரப்பில் இருந்து வந்திருக்கும் அதிகாரபூர்வமான முதல் குற்றச்சாட்டு இது.

நாட்டையும், மக்களையும் குறிப்பாகப் பொருளாதாரத்தையும் சீரழித்து வரும் - இனப்பூசலுக்கு - போருக்கு முடிவு கட்டவேண்டிய ஒரு வரலாற்றுக் கட்டத்தில் -

அதற்கான சமாதான முயற்சிகள் ஒரு தெளிவான தடத்தில் நகரத் தொடங்கி இருக்கின்ற சூழ்நிலையில் -

நம்பிக்கையீனங்களுக்கு இடமளிக்காது நடந்துகொள்ளவேண்டிய பாரிய கடப்பாடு, சம்பந்தப்பட்ட இரு தரப்புத் தலைவர்கள்மீதும் சுமத்தப்பட்டிருக்கிறது.

அந்தவகையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் நல்லெண்ண சமிக்ஞையாகப் போர்க்கைதிகள் பத்துப்பேரை விடுவித்திருந்தார். மக்களின் அன்றாட அவலங்களைத் தீர்ப்பதற்காக - தமக்குள்ள பாதுகாப்பு ரீதியான அச்சுறுத்தல்களை ஒதுக்கி வைத்துவிட்டு - வன்னியில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும், அங்கிருந்து குடாநாட்டுக்கும் மக்களின் போக்குவரத்தை இலகுவாக்குவதற்காகப் பாதைகளைத் திறக்க இணங்கி, அதனை அரசுத்தரப்புக்கும் முறைப்படி தெரிவித்திருக்கிறார்.

ஆனால் அரசு அதனைக் கவனத்தில் எடுக்காது - பதில் நடவடிக்கைகளைச் செயலில் காட்டாது - மௌனம் சாதித்துவருவது புலிகளுக்கு அதிருப்தியைக் கொடுத்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாண்பதற்கான அமைதிப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு முன்னர் அதற்கான நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை ஏற்படுத்துவதும், மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதும் தனது நோக்கம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆனால் இந்த முயற்சிகளில் தாம் தீர்க்கமாக இருப்பதை வெறும் உரைகளில்மட்டும் அல்லாமல் செயலிலும் வெளிப்படுத்த வேண்டியது பிரதமரினதும், அவரது அரசினதும் கடமை - வரலாற்றுப் பொறுப்பு - என்பதை மீண்டும் ஒருதடவை வலியுறுத்த விரும்புகின்றோம்.

யாழ்ப்பாணத்துக்கும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப்பகுதிக்கும் இடையிலான பாதையைத் திறந்துவிட்டால் அது பாதுகாப்பு ரீதியில் பெரும் அச்சுறுத்தலாக மாறிவிடும் என்று அரசுத்தரப்புக் கருத்துவதாகத் தெரிகிறது.

அரசுத்தரப்பின் பின்னடிப்புக்கான காரணங்கள் சரியாகவோ அன்றி தவறாகவோ இருக்கலாம். ஆனால் இத்தகைய நம்பிக்கையீனமும், சந்தேகமும் மனம்விட்டுப் பேச்சு நடத்துவதற்கும் இருதரப்பின் இணைந்த முயற்சிமூலமான தீர்வுக்கும் உதவப்போவதில்லை. இதனை அரசுத்தரப்பு தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும்.

சமாதானத் தீர்வு தொடர்பாக நாட்டுமக்களின் மனங்களில் நம்பிக்கை ஒளிக்கீற்றுகளை ஏற்படுத்தியிருக்கும் பிரதமர் ரணிலின் ஆரம்ப முயற்சிகள் அர்த்தமுடையனவாகத் தொடரவேண்டுமாயின், நம்பிக்கையீனத்தையும் சந்தேகப்போக்கையும் அப்பால் ஒதுக்கிவிட்டு - மக்கள் தந்த ஆணையை நிறைவேற்ற - தளம்பாமல், குழம்பாமல் அர்த்தபுஷ்டியுடன் செயலாற்ற அவர் திடசங்கற்பம் பூணவேண்டும்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பாக இன்னமும் வாக்குறுதிகளை மட்டும் அறிக்கைகள் மூலம் அள்ளி வீசிவரும் அரசுத்தரப்பு அரசியல் தலைவர்களும், தமிழ் அரசியல்வாதிகளும் இவ்விடயத்தில் பிரதமரை வழிநடத்தும் வகையில் அழுத்தங்களைப் பிரயோகிக்க முன்வரவேண்டும்.

அவர்கள் இதைச் செய்வார்களா?

## இன்று இலங்கை திரும்பிய கையோடு
# லண்டன் பேச்சுக்களின் விவரங்களை ரணிலுக்கு விளக்குவார் வெஸ்பேர்க்

கொழும்பு,பெப்.1

லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்திய நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க இன்று இலங்கை திரும்புவார். லண்டன் பேச்சுக்களின் விவரங்களை அவர் பிரதமருக்கு அறிவிப்பார்.

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இதனைத்தெரிவித்தார்.

லண்டன் பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளன. பெப்ரவரி 24ஆம் திகதிக்குள் நிரந்தர யுத்தநிறுத்தத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வாய்ப்பு உண்டு என்றும் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

பின்வரும் அமைச்சரவைத் தீர்மானங்களையும் அவர் அறிவித்தார்.

☆ அரசியல் நோக்கங்களுக்காகப் பதவி நீக்கம், இடமாற்றம், பதவி இறக்கம், பதவி உயர்வு, மறுப்பு முதலான நடவடிக்கைகளால் பழிவாங்கப்பட்ட அரச ஊழியர்களின் விண்ணப்பங்களை ஆராய்ந்து நிவாரணம் வழங்க குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் அறிக்கைகளைப் பொதுச்சேவைகள் ஆணைக்குழு பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

☆ புதிய அரசாங்கத்தின் இடைக்கால கணக்கு அறிக்கை அடுத்த வாரம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும்.

☆ பெப்ரவரி 3ஆவது வாரம் 17 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெறும்.

☆ பொருள்களைப் பதுக்கி வைத்தல், செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துதல், வர்த்தகத்தில் தன்னாதிக்கம் செலுத்தல் என்பனவற்றைக் கட்டுப்படுத்த வர்த்தக, வாணிப கட்டளைகள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும். (க)

# சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்புப் பெற அமைச்சர் மிலிந்த அமெரிக்கா விரைவு

கொழும்பு,பெப்.1

சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பை நாடியுள்ளது இலங்கை அரசு.

இந்த ஒத்துழைப்பைக் கோரி அமைச்சர் மிலிந்த மொரகொட கடந்த செவ்வாய்க்கிழமை வாஷிங்டன் புறப்பட்டுச் சென்றுள்ளார். பிரதமர் ரணில் விக்கிரசிங்கவின் செய்தி ஒன்றையும் அமைச்சர் எடுத்துச் சென்றிருக்கிறார்.

வாஷிங்டனில் அவர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார். அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ரிட்சர்ட் ஆர்மிடேஜுடனும் மொரகொட விசேட சந்திப்பு ஒன்றை மேற்கொள்வார். (க)

## சவோய் தியேட்டர் பணத்துடன் கொள்ளையர் கைது!

கொழும்பு,பெப்.1

வெள்ளவத்தை சவோய் படமாளிகையின் பணம் ஒரு லட்சத்து 62 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. ஆனால் துரிதமாக செயற்பட்ட வெள்ளவத்தைப் பொலஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஹால் மெண்டிஸ் பணத்துடன் கொள்ளையரைக் கைது செய்தார்.

கடந்த செவ்வாயன்று படமாளிகையின் பணம் வங்கிக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொழுது இரு இளைஞர்கள் ஓட்டோவில் வந்து கத்தியைக் காட்டிக் கொள்ளையடித்தனர். வெள்ளவத்தைப் பொலீஸ் பொறுப்பதிகாரி தகவல் கிடைத்து ஓட்டோ இலக்கத்தைப் பெற்றுக்கொண்டார். சில மணிநேரத்தில் வனாத்தமுல்லைப பகுதியில் இருந்து இரண்டு சந்தேக நபர்களைக் கைதுசெய்தார். (க)

## 300 ஹாஜிகளுடன் முதல் விமானம் மக்கா புறப்பட்டது

புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற இலங்கையிலிருந்து 300 ஹாஜிகளுடன் முதலாவது விமானம் நேற்றுமுன்தினம் காலை 10.05இற்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து புனித மக்காவுக்குப் பயணமானது.

ஹாஜிகளை வழியனுப்பும் வைபவம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்றது. இந்த வைபத்தில் கப்பற்றுறை, துறைமுகங்கள் அபிவிருத்தி, கிழக்கின் அபிவிருத்தி, முஸ்லிம் சமய கலாசார அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஹாஜிகளை வழியனுப்பிவைத்தார். மேலும் ஹஜ் குழுத் தலைவர் உவைஸ் பாரிஸ், முஸ்லிம் கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.ரபீக், அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஏ. எஸ்பெரேரா மற்றும் திணைக்கள அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

இம்மாதம் 17ஆம் திகதி வரை இலங்கையிலிருந்து ஹாஜிகள் மக்காவுக்குப் பயணமாவார்கள். (க)

## நாளை

தை 20
சனிக்கிழமை
(02-02-2002)
திதி : பஞ்சமி
மாலை 5.54 வரை.
நட்சத்திரம் : அத்தம்
நள்ளிரவு 12.13 வரை.
சுபநேரம் : 2.36 - 5.06
ராகுகாலம் : 9.36 - 11.06
(பழைய நேரப்படி)

# 'பட்ஜெட்' பற்றாக்குறை இம்முறை 25ஆயிரம் கோடி!

கொழும்பு,பெப்.1

இம்முறை வரவு - செலவுத் திட்டப்பற்றாக்குறை 25,000 கோடி ரூபாவாக இருக்கும். இது மொத்ததேசிய உற்பத்தியில் 10.5 சதவீதமாகும்.

நிதியமைச்சின் மதிப்பீடுகளில் இந்த விவரங்கள் தெரியவந்திருக்கின்றன என்று அமைச்சு வட்டாரங்கள் மூலம் அறியவருகின்றது.

தற்போதைய மதிப்பீடுகளின்படி 2002 ஆம் ஆண்டில அரசின் செலவினம் 53,000 கோடி ரூபாவுக்கும் அதிகமானதாகும். 2001 ஆம் ஆண்டில் வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறை 12,300 கோடி ரூபாவாக இருந்தது.

இதுவரையிலான வரவு - செலவுத்திட்ட பற்றாக்குறையில் இவ்வாண்டு பற்றாக்குறையே மிக அதிகமானதாகும். (க)

# கட்டுநாயக்க தாக்குதல் சம்பவம்; கைதானவர்களில் 29பேர் விடுவிப்பு

கொழும்பு,பெப்.1

கட்டுநாயக்க விமான நிலையம் மீதான தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த 29 பேரை நீர்கொழும்பு நீதிவான் கடந்த செவ்வாயன்று விடுவித்தார்.

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 28 பேரும் ஒரு சிங்களவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இவர்களுக்கு எதிரான சாட்சியங்கள் எதுவும் இல்லாததாலேயே நீதிவான் அவர்களை விடுவித்தார்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட விமானப்படை அதிகாரிகள் உட்பட 31 படையினர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-3யி)

## விபத்தில் இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம்,பெப்.1

பலாலி வீதியில் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனமும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

திருநெல்வேலிச் சந்திக்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த மலைக்கியான் செபஸ்ரியன் (வயது20) என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6-15-139)

## உதயவாக்கு

நன்றாகக் கட்டப்பட்ட வீட்டில் மழைநீர் நுழைவதில்லை; நற்சிந்தனை படைத்தவன் உள்ளத்தில் ஆசை நுழைவதில்லை.

# நாட்டு நடப்பு

## தென்மராட்சி அன்றும் இன்றும்

அன்று - 1

தெங்கொடு பலாவும் மாவும்
திரண்டொன்றாய் சோலை யாக
எங்கணும் பழம் சொரியும்
எடுப்பவரை அங்கு காணோம்
தங்கிடும் பறவை கூட
தாமதை உண்ண எண்ணா
தொங்கிடும் பழத்தை மட்டும்
தொளை போட்டு சாறருந்தும்
கண்ட அத்தோட்டக்காரன்
கழி பேருவகை கொண்டு
மண்ணாங்கட்டி கொண்டு கூட
மறந்துமே எறிய மாட்டான்
அன்பினின் எல்லை கண்ட
அழகுறு பறவை எல்லாம்
எண்ணம் போல் கூடு கட்டி
இங்கேயே தங்கி வாழும்
வண்ணமார் பறவை ஒன்றாய்
வாய்விட்டுப் பாடும் கீதம்
கண்கவர் தென்மராட்சி தன்னை
காலையில் எழுப்பும் அம்மா!

- விகடகவி.

# 4 லட்சத்து 87 ஆயிரம் சிறுவர்கள் யுத்தத்தால் அகதிகளாகி அவலம்

கொழும்பு,பெப்.1

வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் அகதிகளாகியுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 87 ஆயிரம் பேர் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. அகதிச் சிறுவர்கள் குறித்து ஆராய்ந்த குழு இவ்வாண்டுவரை மேற்கொண்ட மதிப்பீட்டில் இது தெரியவந்திருப்பதாக சமூக சேவைகள், சேமநலன்கள் அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்திருக்கிறார்.

கடந்த அரசின் பதவிக்காலத்தில் இந்த அகதிச் சிறுவர்கள் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. யுத்தப் பிரதேசங்களில் சுமார் 60 ஆயிரம் சிறுவர்கள் பாடசாலை செல்வதில்லை. புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, அகதிகள் அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுடன் கலந்தாலோசித்து இந்தச் சிறுவர்களுக்குப் புனர்வாழ்வளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு அமைச்சர் சமரவீர தெரிவித்தார். (க)

## ஆஸி.ராஜதந்திரி நாளை யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம்,பெப்.1

கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் மரியா பூலா நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

எதிர்வரும் புதன்கிழமை வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அவர், அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவார்.

ஆஸ்திரேலிய தூதரகத்தின் பொது மக்கள் தொடர்பு அதிகாரி ருக்ஷானும் அவருடன் வருகிறார். (க-3)

## மெய்வன்மைப் போட்டி

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக தெல்லிப்பழை திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் வ.சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய நிர்வாக அதிகாரி ச.வீரசிங்கமும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைவர் ச.தனபாலசிங்கமும் கலந்து கொள்வர். (ம)




கடந்த 12ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்மன்றம் நடத்திய சாந்தனின் இரு நூல்கள் அறிமுக அரங்கில் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் ஆய்வுரை நிகழ்த்துகையில் எடுக்கப்பட்ட படம். மேடையில் அருள்திரு. ஜெயசீலன் அடிகள், சட்டத்தரணி ந.ஜீவேஸ்வரா, கலாநிதி சி.சிவலிங்கராசா, வி.பி.சிவநாதன், சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ஐ)

# அளவெட்டி கும்பழா

# புனராவர்த்தனப் பிரதிஷ்டா ம

## 01-02-2002



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

அளவெட்டி கும்பழாவளைப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் இடம்பெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமான் இவ்வாலயத்தில் நீண்ட காலங்களாக வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு எழுந்தருளியுள்ளார்.

விநாயகருக்கு இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்யும் அபிஷேகம் ஆகும். நிறைந்த திருப்பணி செய்து, புதுப்பொலிவுடன் இவ்வாலயம் விளங்குகின்றது. இவ்வாலயமானது வழிபடும் அடியவர்களுக்கு மனச் சஞ்சலங்களை நீக்கி மன அமைதியைத் தரக்கூடியவாறு அமைந்துள்ளது.

நம் சமயத்தில் முதல் வழிபாடாக விநாயகப் பெருமான் விளங்குகின்றார். அவரை வணங்கி எக்காரியங்களையும் தொடங்கவேண்டும் என்பது எமது சமய மரபு. மிகவும் இலகுவான வழிபாடாக அமைவது விநாயகர் வழிபாடு. வழிபடுகின்ற அடியவர்களுக்கு வாக்கும், மனமும், நோக்கமும், சுகமான உடலும் அமையும் என்பது ஔவையாரின் கருத்தாகும்.

இயல், இசை, நாடகம் என்கின்ற முத்தமிழையும் வளர்த்தெடுத்த பிரதேசம் அளவெட்டியாகும். உதாரணமாக அளவெட்டி திரு.தட்சணாமூர்த்தி போன்ற பல கலைஞர்கள் இப்பிரதேசத்துக்கு அழகு சேர்த்துள்ளனர். இவ்விநாயகரை வணங்கி, நாமும் அருள்பெற்று உய்வடைவதற்கு நடைபெறும் இக்கும்பாபிஷேகத்தைத் தரிசித்து அருள்பெறுவோமாக. இக்கும்பாபிஷேகத்தை நடத்தும் சிவாசாரியர்களுக்கும் திருப்பணிச் சபையினருக்கும் இறைவனின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய ஸ்வாமிகள்.
2ஆவது குருமகா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## கும்பழாவளைப் பி

கும்பழாவளை விநாய
மாருதப்புரவிகவல்லியால்
நாயகமாக எம்மருங்கு
மாருதப்புரவிகவல்லி வழி
நினைவுக்கும் தோன்றா
என்பது ஐதிகம். பத்
வாய்ந்தது இவ்வாலயம்
வருடாவருடம் நடைபெறு
இசை போகிய தல
அருட்பொலிவும் - வா
யும் நித்திய பூசை மு
தோறும் அடியார்கள்
மீண்டு வந்தபோது ஆ
புதுப்பொலிவுடன் கட்டி
மென தர்மகர்த்தாக்கள்
பணிச்சபை அமைக்கப்பட்
நிறுவனத்துடன் ஒப்பந்
பெருக பணவரவு சிறக்
சென்று, சிறப்பான - அழ
விநாயகப்பெருமான் கடாட்ச
அடிப்படையானது.

மிகமிக அழகாக -
கிலுள்ள அதிசிறந்த
நிற்கும் இவ்வாலய கு
கிழமை நடைபெறு
எம்பெருமானின் அ
என அழைப்புவிடுத்து

## மனம் சிறக்கக் கருணை செய்வாய்!

கலை சிறந்த சிவம் பூத்த அளவையூரில்
கவின் சிறந்த கும்பழாவளை யமர்ந்த
நிலை சிறந்த கணபதியே அநாதியாக
நீயிருந்த ஆலயத்தைப் புதுமையாக்கித்
தலை சிறந்த சிங்காரக் கோயிலுக்குள்
தலஞ் சிறந்த வேதகும்பாபிஷேக மாற்றி
மலை சிறந்த நினை இருத்தி மகிழ்ந்தோம் நாங்கள்
மனம் சிறக்க கருணை செய்வாய் போற்றி! போற்றி!!

தங்கு விஷு வருடம் தைத் திங்கள் வெள்ளி
தாங்கும் உத்தரப் புனித நன்னாளில்
பொங்கு மணிச் சிங்காரக் கோயில் கொண்ட
புண்ணியனே உமை மகனே - புவனமெல்லாம்
துங்கமிகு தமிழ் செழிக்க சமாதானத்தில்
மங்களச் சீர்வளம் செழிக்க கலை செழிக்க
வரந்தந்து காத்தருள்வாய் போற்றி! போற்றி!!

அளவையூர் அருட்கவி
சீ.விநாசித்தம்பிப் புலவர்.

## கும்பாபிஷேகக் குருக்களின் ஆசி

பல கலைஞர்களும் கல்விமான்களும் சமய சீலர்களும் வாழ்ந்துவரும் அளவெட்டி கிராம மத்தியில் அமைந்துள்ள கும்பழாவளை விநாயகர் ஆலய கும்பாபிஷேகக் கிரியைகளில் பங்குபற்ற அடியேனுக்கும் திருவருள் கிடைத்தமை பற்றி பெருமகிழ்வெய்துகின்றோம். பழம்பெரும் பெருமை வாய்ந்த இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் - மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய விஷேடம் பெற்றதும், சாந்நித்தியம் பெற்றதும் ஆகும். ஆலயம், சிறந்த சிற்ப வேலைகளுடன் - பார்த்தவர்களை வியக்கவைக்கும் - தன்மையோடு அழகாக அமைந்திருப்பது ஆச்சரியத்துக்குரியது. விநாயகப்பெருமானின் திருவருள் இக்கிராம மக்களின் துயர்துடைத்து இன்பமாக எல்லோரும் வாழ அனுக்கிரகிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள்
நவாலி (கொழும்பு).

## தர்மகர்த்தா சபைத் தலைவர் ஆசியுரை

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தும் கொழும்பில் வசிக்கும் என்னை எதிர்பாராமலே இவ்வாலயத் திருப்பணி வேலைகளைச் செய்யும்படி நிர்ப்பந்தித்து, கும்பாபிஷேகத்தையும் நடத்திவைக்கும்படி பணித்துள்ளார் விநாயகப்பெருமான். அவரின் திருவருள் இவ்வாறு என்னை ஆக்கியுள்ளது. என் செயல் யாதொன்றும் இல்லை. எல்லாம் அவன் செயலே. கும்பாபிஷேகம் இனிது நிறைவேறப் பிரார்த்திக்கின்றோம்.

சோ.சிவப்பிரகாசம்
தலைவர், தர்மகர்த்தா சபை



## ............... மஹா கும்பாபிஷேகத்தை வாழ


ஆனைமுகப் பெருமானின் அருட்கடாட்சம்
அனைவருக்கும் கிடைக்க வேண்டி
கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துகின்றோம்!
**கதிர்காமசிங்கம் சன்**
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

விக்கினம் தீர்க்கும் விநாயகப்பெருமானின்
திருவருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும்!
**ரூபன்**
**பல்பொருள் வாணிபம்**
K.R. அளவெட்டி.

கருணை மழை பொழியும் கணபதியின் திருவருள்
அனைத்து மக்களுக்கும் ஆசி வழங்கட்டும்!
**விநாயகர்**
**தொலைத் தொடர்பு நிலையம்**
அளவெட்டி மேற்கு,
(அருணோதயக் கல்லூரி அண்மையில்)
உள்ளூர்: 070 212561
வெளியூர்: 0094-070-212561

வேழமுகத்
வாழ
**விநாயக**

# ...வளைப் பிள்ளையார்

## ...மஹாகும்பாபிஷேக சிறப்புமலர்

### வெள்ளிக்கிழமை

## ...ளைப் பிள்ளையாரின் வியத்தகு மாட்சி

...ள விநாயகர் ஆலயம் உக்கிரச் சோழன் மகளாகிய
...வல்லியால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு ஆலயங்களில் நடு
...ருங்கு தீர்த்தத்தினும் நான்காவதாக உள்ளது.
...வல்லி வழிபடுசெய்து, தனது குதிரை முகம் தனது
...தோன்றாது முற்றாக நீங்கிய தலம் கும்பழாவளை
... பத்து நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பழைமை
...வாலயம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.
...நடைபெறும் மஹோற்சவத்தினால் திசைதோறும்
... தலம் கும்பழாவளை. இத்தகைய மேன்மையும் -
- வா... தகித்தலம், மக்கள் புலம்பெயர்ந்த காலை
... மு... நடைபெற்ற தலம் என்பதை நினைக்கும்
...கள் ஆனந்தக் கண்ணீர் வடிப்பர். மக்களிற் சிலர்
...ாது ஆலயச் சிதைவுகள் கண்டு - ஆலயத்தைப்
... கட்டியெழுத்து - கும்பாபிஷேகமும் நடத்தவேண்டு
...தாக்கள்சபை தீர்மானித்தது. அதற்கிணங்க திருப்
...மக்கப்பட்டது. கட்டட ஒப்பந்தகாரராகிய "ருலின்ஸ்"
... ஒப்பந்த செய்யப்பட்டது. மக்கள் ஆதரவு பெருகப்
... சிறக்க சிறக்க ஆலயத் திருப்பணி நீண்டு நீண்டு
...ான - அழகான - ஆலயமாக உருப்பெற்றது.
...ான் கட்சியே இன்றுள்ள ஆலயத் தோற்றத்திற்கு
...து.
...ாக - நான்கு வீதிகளுக்கு அமைவாக - யாழ்ப்பாணத்
...ந்த கட்டமுள்ள எந்த ஆலயத்திற்கும் ஈடிணையற்று
...ய கும்பாபிஷேகம் இன்று (01.02.2002) வெள்ளிக்
...பெறுகிறது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும்
... அந்த ஆலயத்தைத் தரிசித்து கும்பாபிஷேகப்
... கண்டு, பேருளுக்கு உரியவர்களாகச் சேரவாரும்
...ந்து அழைக்கிறோம்.

பண்டிதர் க.நாகலிங்கம்,
திருப்பணிச் சபைத் தலைவர்.

## ஆலயக் குருக்களின் ஆசியுரை

'கஜானநம் பூதகணாதி சேவிதம் கபித்த ஜம்பு பலசார பட்சிதம்
உமாசுதம் சோக விநாச காரணம் நமாமி விக்கினேஸ்வர பாத பங்கஜம்'

அளவெட்டிக் கிராமத்திற்கு நடுநாயகமாக இருப்பது கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலயமாகும். இதன் உற்பத்தியே அதிசயமானதும் அற்புதமானதுமாகும். சோழ அரசிளங்குமரியான மாருதப் புரவீகவல்லியின் குதிரை முகம், அவளது பார்வைக்கும் முற்றாக நீங்கிய தலமும் இதுவாகும். இவ்வாலயத்தோடு தொடர்புடைய அற்புதங்கள் பல. அவை விவரிக்கிற் பெருகும்.


1995ஆம் ஆண்டு அளவெட்டி மக்கள் இடம்பெயர்ந்தபோது - எனது தம்பியாரும் இடம்பெயர்ந்து சென்றார். இடையில் இராணுவத்தால் தடுக்கப்பட்டு ஆலயத்திற்கே திருப்பி அனுப்பப்பட்டார். ஆலயச் சூழலிலும் பத்துப்பேர் வரை வெளியேறமுடியாது இருந்தனர். ஒரு நாளும் தவறாது பாலாபிஷேகத்தோடு தினமும் ஒரு பூசை நடத்தி வந்தனர். இதைப்போல யாழ்ப்பாணத்தில் எக்கோயிலிலும் ஒழுங்காகப் பூசை நடைபெற்றதாக நாம் அறியவில்லை. இது கும்பழாவளையானது திருவிளையாடலே அன்றி - வேறன்று. அவரது திருவிளையாடல்கள் இப்படி விரிக்கிற் பெருகும்.

இவ்வாலய புனருத்தாரண கும்பாபிஷேகம் இன்று (01.02.2002) வெள்ளிக்கிழமை நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. ஆலயத்தில் பல திருப்பணிகள் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்க வெளிநாட்டு விநாயகப் பக்தர்கள் கிராம மக்கள் பெரும் பொருள் உதவி செய்துள்ளனர்.

விநாயகப் பக்தர்கள் திரள்திரளாக வருகை தந்து, வாழ்க்கையிற் கிடைத்தற்கரிய கும்பாபிஷேகத்தைத் தரிசனம்செய்து, அவரது திருவருட்கடாட்சத்துக்கு ஆளாகி, தமது இன்னல்கள் தீரப்பெற்று - நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவப் பிரார்த்திக்கின்றேன்.

சர்வ ஜனாஷா சுகினோபவந்து.

பிரம்மஸ்ரீ இ.சோமசுந்தரக்குருக்கள்
அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு





## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வாழ்த்துரை

இன்று (01-02-2002) வெள்ளிக்கிழமை நடைபெறுகின்ற மஹா கும்பாபிஷேகச் சிறப்பு விழா இதுவாகும். அளவெட்டிவாழ் மக்களுக்கு மாத்திரமல்ல, இந்த மண்ணில் வாழும் சைவ மக்கள் அனைவரும் ஏற்றிப் போற்றும் ஆலயம் இதுவாகும். அதிகாலை ஐந்து மணிக்கு எழுப்பப்படும் மணியோசை ஏறக்குறைய மூன்று மைல் சுற்றாடலுக்கு கணீரென்று ஒலிக்கிறது.

"கும்பழாவளையானே! ஆலய குஞ்சர முகத்தானே! குறை குற்றம் வராமல் காத்தருள்வாய்!" என்ற திருப்பாடல் ஒலி எல்லோர் வாயிலும் ஒலிக்கின்ற நேரம் இதுவாகும். கட்டட அமைப்பாலும் அந்தணர்கள் பணியாலும் - ஆர்வலர்கள் ஆற்றும் தொண்டினாலும்-இவ்வாலயம் தன்னிகர் இல்லாச் சிறப்புடன் காட்சிதருகிறது.

மூலஸ்தானத்தில் அருட்காட்சியும் - பஞ்சமுகப் பிள்ளையாரின் திருக்காட்சியும் - ஒருசேர வணங்குவோர் உள்ளத்தை ஈர்க்கின்றதன்மை வியப்புக்குரியது. இன்று மேலும் சிறப்பான சிற்ப வேலைப்பாட்டுடன் ஆலயம் அழகொழுக விளங்குகிறது. முன்னே அமைந்த கிழக்கு மண்டபம் - கலாமண்டபமாகக் காட்சிதருகிறது.

மிகவும் துரிதமாக திருப்பணி வேலைகள் நிறைவு பெற்று பிள்ளையாரின் அன்பர்கள் அனைவருடைய ஆதரவிலும் குடமுழுக்கு விழா நடைபெறுகிறது. இவ்விழாவைத் தரிசிப்பதற்கு உலகத்தின் பல பாகங்களில் இருந்தும், ஈழத்தின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து கூடவிருப்பது அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## செயலாளரின் ஆசி

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் சோழநாட்டு இளவரசி மாருதப்புரவீகவல்லியால் தனது குதிரை முகச்சாயல் நீங்கப்பெற்றமைக்காக அமைக்கப்பட்ட ஏழு ஆலயங்களுள் நடுநாயகமாக விளங்கும் பெருமையையும் வன்செயல், புலம்பெயர்வுகள் காரணமாக யாழ்நகரிலுள்ள அனைத்து ஆலயங்களிலும் நித்திய, நைமித்திய கிரியைகள் நடைபெறாதிருந்தபொழுதும், நித்திய கிரியைகள் யாவும் தடங்கலின்றி நடைபெற்ற ஆலயம் என்னும் அருட்பெருமையைத் தன்னகத்தேகொண்ட வியப்பிற்குரிய ஆலயமாகும்.

நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமைகள் காரணமாகப் பாதிப்பிற்குட்பட்ட ஆலயத்தினை புனரமைப்புச் செய்து, உரியகாலத்தில் கும்பாபிஷேகம் செய்ய இயலாதிருந்தமை அனைவரும் நன்கறிந்த உண்மையாகும்.

"அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா" என்னும் அருள் வாக்கிற்கிணங்க, புனரமைப்பிற்கான காலம் கனிந்து, பொது மக்களால் மனமுவந்து அளித்த நிதி உதவியால் புனரமைப்பு வேலைகள்யாவும் தர்மகர்த்தாக்கள்சபை, திருப்பணிச் சபை, தொண்டர்சபை, ஒப்பந்தகாரர் அனைவரினதும் அயராத முயற்சியால் துரிதகதியில் ஓரளவு பூரணப்படுத்தப்பட்டு கும்பாபிஷேம் நடந்தேற அருள்பாலித்த அப்பனின் அருட்செயலை வியந்தும், நயந்தும், பாராட்டும் அதே வேளையில், இத்திருத்தொண்டில் பங்காற்றிய அனைவருக்கும் விநாயகப்பெருமானின் அருள்கிடைக்க வேண்டுமென இறைஞ்சி, அனைத்துச் சபைகளின் சார்பிலும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக என வாழ்த்தி ஆசி உரையை நிறைவு செய்கின்றேன்.

கும்பழாவளை,
அளவெட்டி.

மா.மயில்வாகனம்,
செயலாளர்,
தர்மகர்த்தாக்கள் சபை,
திருப்பணிச்சபை.


## ...வாழ்த்தி ஆதரவு வழங்குபவர்கள்:

...முகத்த விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுதுவரும்
...யகர் களஞ்சியம்
...ட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

"வெள்ளைக்கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே!"
குடமுழுக்குப் பெருவிழா சிறக்கட்டும்!
விநாயகர் சைவ உணவகம்
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.
070-212878

"அப்பமுப்பழம் அமுது செய்தருளிய
தொப்பையப்பனைத் தொழ வினை அறுமே"
கும்பாபிஷேகம் சிறப்பாக அமையட்டும்
மதுரா
தொலைத்தொடர்பு சேவை,
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.
உள்ளூர் Tel. No. : 070-212878
வெளிநாடு : 0094-070 212878

ஆனைமுகத்தோனே! ஐங்கரனே!
பானைவயிற்றோனே!
பக்தர்களைக் காப்பவனே!
குடமுழுக்கு விழா கோலாகலமாக
நடைபெறட்டும்.
அளவெட்டி - மல்லாகம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அளவெட்டி.
(0118)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 1958 - 08 - 26 | 2002 - 01 - 02 |



## அமரர் கணபதி செல்லத்துரை

அன்பையும் பண்பையும் ஊட்டி வளர்த்த எம் அன்புத்தெய்வமே!
அவனியிலே எம்மைப் பரிதவிக்கவிட்டு நீர் எங்கு சென்றீர்?
காலமெல்லாம் எம்மைக் கண்போலக் காப்பீர் எனக்
கற்பனைக் கோலம் பூண்டோம்!
யாவும் மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்டதே.
அரிவையர் நாம் இனி அவனியிலே யாது செய்வோம்?
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

அன்னாரின் மறைவுச்செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்தோருக்கும், அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எம் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள் பல.....

இன்று 01.02.2002 வெள்ளிக்கிழமை நடைபெறுகின்ற ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*துர்க்காபுரம்,*
*தெல்லிப்பழை.* (156)

- மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

# 37 ஆம் நாள் நினைவஞ்சலியும்

### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 - 06 - 1937 | 27 - 12 - 2001 |



## அமரர் மாதன் சின்னத்தம்பி

*(சூரிய இல்லம், துர்க்காபுரம், தெல்லிப்பழை)*

அன்பெனும் உணவு கொண்டு அறிவெனும் பசியகற்றி
எண்பெரும் திசைகளெங்கும் ஏற்ற நல் உயர்வு பெற்று
கண்ணியமான வாழ்வால் கலந்து விட்டீர் பலரின் நெஞ்சமதில்
புண்ணிய முதலாம்ப் பூமி எனும் சக்கரத்தில் வாழ்ந்தீர்
காலனவன் பிடியதுவால் தொலை தூரம் சென்றுவிட்டீர்
என்றென்றும் உங்கள் நினைவில் வாழ்வாங்கு வாழ்வோம்.

எமது குடும்பத் தலைவரது பிரிவுச்செய்தி கேட்டு வருகைதந்து பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன், இன்று (01.02.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு: இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.*

- பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள். (129)

*சிதயாபரன்,*
*துர்க்காபுரம், தெல்லிப்பழை.*

# இரண்டாம் வருட கண்ணீர்க் காணிக்கை

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23 - 12 - 1966 | 01 - 02 - 2000 |



## ஆசிரியர் வேலாயுதம்பிள்ளை விமலன்

(சாயி மாஸ்ரர்)

கருணைக்கோர் இருப்பிடமே!
காமுறுவோர்க் கிருநிதியே
இதயத்தைப் பிழிதுயரம்
ஆறுவதும் எந்நாளோ?
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*தும்பளை மேற்கு,*
*பருத்தித்துறை.* (சி-20532)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# வன்னி ஆசிரியர்களுக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.1

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில இருந்து யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுவந்த 8 ஆசிரியர்களை உடனடியாக யாழ்.கல்வி வலயத்தின் ஆசிரியர் நிர்வாகக் கிளையுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிககப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்டுள்ள ஆசிரியர்களும அவர்கள் முன்னர் கடமையாற்றிய பாடசாலை பற்றிய விபரங்களும் வருமாறு:-

சா.தவக்குமார் - (மு/பாண்டியன் குளம் ம.வி.), திருமதி கா.சசிதரன் (மு/புதுக்குடியிருப்பு ம.வி.), வைரமேஸ்வரம்பிள்ளை (மன்./புனித லூசியா ம.வி.), அ.வ.ஆனந்தராசா (மன்./சி.ப.வி.அ.த.க.பாடசாலை), செல்வி அ.சா.மரியாம்பிள்ளை (கிளி./பல்லவராயன்கட்டு இ.த.க.பா.), திருமதி சு.தம்பிராசா (கிளி./தர்மபுரம் ம.வி.), ச.வேலழகன் (வ/நொச்சிக்குளம் இர.1.த.க.வித்தியாலயம்), திருமதி வேலழகன் சிவநந்தினி (வ/நொச்சிக்குளம் இர.1.த.க.வித்தியாலயம்).

(ஐ-7)

# நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.1

பனை அபிவிருத்திச் சபையும் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் பனைவள அபிவிருத்திக்குத் தொண்டாற்றி மறைந்த பெரியார்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.ப.நோ.கூ. சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொளவார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா 'பனைவளம்' என்னும் தலைப்பில் நினைவுப்பேருரை நிகழ்த்துவார்.

(ஐ-3)

# திருமண உபசார அழைப்பு

12.11.2001 அன்று நடைபெற்ற எமது திருமணத்தை முன்னிட்டு எதிர்வரும் (03-02-2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் தேநீர் விருந்து உபசார வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி
**சண்முகலிங்கம் (குமார்) குடும்பத்தினர்**
நல்லூர் ப.நோ.கூ.சங்கம்,
இல. 2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (030)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் குமாரு நடராசா (ஜேர்மனி)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05.02.1937 | 01.02.2001 |

பாசமிகு தந்தையாய் பாரினில் எமை வளர்த்து
பற்பல சிறப்புப் பெற்று நாம் வாழ வழி அமைத்தீர்களே!
ஓராண்டு மட்டுமல்ல ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஒளிவீசும் உங்கள் முகத்தை மறப்போமா? ஐயா!
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*போக்காலை வீதி, உடுப்பிட்டி.* (C/20545)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

### நன்றி நவிலலும்

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 08 - 05 - 1952 | 02 - 01 - 2002 |



## அமரர் பொன்னையா கணேசலிங்கம்

*(முகாமையாளர் - மக்கள் வங்கி நீடித்த கருமபீடம், பருத்தித்துறை)*
B.Sc. (Estate Management, University of Colombo)

அன்பெனும் பொக்கிஷத்தால் அரவணைத்தீர்
எண்ணமுன் வேண்டும் பொருள் விருப்புடன் ஈந்தீர்
கண்ணதும் ஒளியும் போல் கலந்து நல் உறவு கொண்டீர்
திண்ணமாய் நாங்கள் வாழ திசைகாட்டமுன் மறைந்தீர்
நீர்க்கதியாய் நின்று அவனியிலே கலங்குகின்றோம்
நிலையில்லா வாழ்வதனை நினைத்து ஏங்குகின்றோம்.
நிமலனடி சேர்ந்த எம் தெய்வமே! நேசமுடன் நீ புரிந்த சேவைதனை
நினைத்து நின் நினைவில் அமைதி காண்போம், காண்போம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

எமது அன்புத் தெய்வமான **அமரர் பொன்னையா கணேசலிங்கம்** அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (01.02.2002) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனநிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு உடனடியாக வந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்தவர்களுக்கும், ஏனைய உதவிகள் புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எம் உளம் நெகிழ்ந்த நன்றிகள்.

தந்தை, மனைவி, பிள்ளைகள், சகோதர
சகோதரிகள், மாமி, மைத்துனர்மார்,
மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள்.

முகவரி:
*திகிரி, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை.* (136)

# தெற்குச் சிறைகளில் வாடும் தமிழர்களை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை

## மகேஸ்வரனிடம் நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.1

தெற்குச் சிறைகளில் வழக்குத் தாக்கல்செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விரைவில் விடுவிக்க விசேட கவனம் செலுத்தப்படும் என்று நீதி அமைச்சர் லொக்கு பண்டார தெரிவித்தார்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தெற்கில் உள்ள சிறைகளில் நீண்ட காலமாக விசாரணைகள் எதுவும் இன்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட கைதிகளை விடுதலைசெய்யவேண்டும் என்று மகேஸ்வரன் அவரிடம் கோரிக்கை விடுத்தார்.

வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை முதற்கட்டமாகவும் - திகதி குறிப்பிடாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை இரண்டாவது கட்டமாகவும் - விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று நீதி அமைச்சர் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலைசெய்ய முன்னோடியாக -

நீதிமன்றங்களில் தற்சமயம் குறுகியகால விளக்கமறியல் உத்தரவு வழங்கப்படுவதாகவும் -

பயங்கரவாதத் தடுப்புச்சட்ட சந்தேக நபர்களுக்கு ஆறுமாதம்முதல் ஒருவருட காலத்துக்கே விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டு வந்தது என்றும் - அமைச்சர் மகேஸ்வரன் கூறினார்.

சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் கோவைகளைத் தனித் தனியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு தமது அமைச்சு சட்டமா அதிபருக்கு உதவி வழங்கி வருவதாகவும் அவர் சொன்னார்.(க-3)

## இலவச ஆங்கில வகுப்பு

வலிகாமம்தெற்கு, பெப்.1

அளவெட்டி கிராமத்தில் இலவசமாக அடிப்படை ஆங்கில அறிவை வருத்திசெய்வதற்கான விசேட வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இன்று முதலாம்திகதிமுதல் வார நாளகளில் தினமும் மாலை 4மணி முதல் 6மணி வரை அளவெட்டி மேற்கு முற்போக்கு வாலிபர் சன சமூக நிலையத்தின் புதிய கட்டடத்தில் மேற்படி வகுப்புகள் நடைபெறும்.

இளைஞர் சேவைகள் மன்றததின் ஆதரவில் அளவெட்டி மேற்கு இளங்கதிர் இளைஞர் கழகத்தினரால் மேற்படி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. (152)

கடந்த இரு தினங்களில் மட்டும்

# கசிப்பு காய்ச்சிய 10 பேர் திடீர் முற்றுகையில் சிக்கினர்!

## ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிப்பு!!

யாழ்ப்பாணம்,பெப்.1

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட 10பேர் கடந்த இருதினங்களில் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ். மதுவரிப்பரிசோதகர்களிடமும், பொலீஸாரிடமும் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட இவர்கள் தமது குற்றங்களை நீதிமன்றில் ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து குற்றவாளிகளுக்கு நீதிவான் குற்றப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார். இவர்களுக்கு மொத்தமாக ஒரு லட்சத்து 4ஆயிரம்ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டவர்களின் பெயர் விவரமும், அவர்களுக்கு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணமும் வருமாறு:-

- பிலிப்பேனாட் (குருநகர்) 10 ஆயிரம் ரூபா குற்றப்பணம், 2ஆயிரம் ரூபா தர்மப்பணம்.
- அரியகுட்டி நடராசா (அழுக்கர் வீதி, யாழ்ப்பாணம்) 10ஆயிரம் ரூபா குற்றப்பணம், 2ஆயிரம் ரூபா தர்மப்பணம்.
- பொன்னு சிதம்பரம் (ஊரெழு கிழக்கு) 5ஆயிரம்ரூபா குற்றப்பணம், ஆயிரம் ரூபா தர்மப்பணம்.
- சின்னப்பு குணம் (உரும்பிராய் கிழக்கு) 5ஆயிரம் ரூபா குற்றப்பணம், ஆயிரம்ரூபா தர்மப்பணம்.
- மேரி பத்மராணி (ஊரெழு கிழக்கு) 5ஆயிரம் ரூபா குற்றப்பணம், 2 ஆயிரம்ரூபா தர்மப்பணம்.
- கந்தையா பாக்கியம் (ஊரெழு கிழக்கு) 5ஆயிரம் ரூபா குற்றப்பணம், ஆயிரம்ரூபா தர்மப்பணம்.
- பாஸ்கரன் செல்வராணி (நீர்வேலி மேற்கு) 20ஆயிரம் ரூபா குற்றப்பணம், 4ஆயிரம்ரூபா தர்மப்பணம்.
- இராசையா தர்மசீலன் (ஊரெழு கிழக்கு) 10ஆயிரம் ரூபா குற்றப்பணம், 2ஆயிரம்ரூபா தர்மப்பணம்.
- சுந்தரம் சுதாகரன்(ஊரெழு கிழக்கு) 5ஆயிரம் ரூபா குற்றப்பணம், ஆயிரம்ரூபா தர்மப்பணம்.
- குட்டியன் ராஜேஸ்வரன் (உரும்பிராய் மேற்கு) இவருக்கு 3ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறும் குற்றப்பணம் செலுத்தத் தவறின் 6மாத கடூழியச் சிறைத் தண்டனை வழங்கவேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை-

இவ்வாறு கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களில் ஒருசிலர் நீதிமன்றுக்கு வாடிக்கையாளரைப்போல் வந்து குற்றப்பணத்தை செலுத்திவிட்டு, மீண்டும் தமது 'தொழிலை' தொடர்ந்து வருகின்றனர் என்று நீதிமன்ற வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன. (க-6-9)

## துன்னாலையில் நகை, பணம் திருட்டு

தென்மராட்சி,பெப்.1

வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளையில் வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த நகைகள், பணம், மோட்டார் சைக்கிள் மற்றும் பெறுமதியான பொருள்களைச் சூறையாடிச்சென்ற சம்பவம் நேற்று முன்தினம் இரவு துன்னாலை வடக்கில் இடம்பெற்றது.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் தாமரைக் குளத்தடியில் உள்ள பற்றை மறைவில் விடப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-117)

# சிறுவருக்கு 'சிங்கிதி' சேமிப்புத்திட்டம்; ஹற்றன் நஷனல் வங்கி அறிமுகம்

யாழ்ப்பாணம்,பெப்.1

பாடசாலை செல்லத் தொடங்கிய ஒருமாதத்துள் சிறுவர்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கியில் 'சிங்கிதி' சேமிப்புக் கணக்கு ஒன்றைப் பெற்றோர்கள் ஆரம்பிப்பதன்மூலம் ஆரம்பவைப்புத் தொகையின் 50 வீதத்தை வங்கி அந்தக் கணக்கில் வரவு வைக்கும். இந்தப் புதிய நடைமுறை நாடளாவிய ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- இவ்வாறு மேற்படி வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கம் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின்படி வங்கியால் வழங்கப்படும் உச்சத்தொகை ஆயிரம் ரூபா ஆகும்.

உதாரணமாக ஒரு பிள்ளைக்கு வங்கியிலிருக்கும் ஆரம்ப வைப்புத் தொகை 2ஆயிரம் என்றால், ஆயிரம் ரூபாவை வங்கி வைப்பில் சேர்க்கும. சிறுவர்களின் சேமிப்புப் பழக்கதை ஊக்குவிக்கவே இந்தப் புதிய திட்டம்.

'சிங்கிதி' கணக்கில் தற்போது யாழ். மாவட்டத்தில் 88 பாடசாலைகளைச் சேர்ந்த 22 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் இணைந்து கொண்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-180)

# யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ்.திருமறைக் கலமன்ற நாடகப பயிலகத்தால் வருடந்தோறும் நடத்தப்படும் நாடகப் பயிற்சிநெறியின் புதியபிரிவு மாணவர்களுக்கான பயிற்சிகள் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

நாடகப் பயிற்சி நெறியில் புதிதாக இணைந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னர் மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்கு புதிதாக இணைந்து கொள்ளவுள்ள மாணவர்களுக்கான நேர்முகக் கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை-

யாழ்.திருமறைக்கலாமன்ற நாடகப் பயிலகம் ஆரம்பித்து இந்த வருடத்துடன் 10 வருடங்கள் நிறைவுபெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-6)

# கஞ்சாவுடன் பிடிபட்ட சிப்பாய்க்கு 6 வார காலச் சிறைத்தண்டனை

வலி.வடக்கு, பெப்.1

சட்டவிரோதமான முறையில் கஞ்சா வைத்திருந்த இராணுவச் சிப்பாய்க்கு 6வாரகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றும் வெல்லம்பிட்டியாவைச் சேர்ந்த சிறித பிரேம்லால் என்ற சிப்பாயே பத்துக்கிராம் கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலீஸாரால் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, மேற்படி தண்டனை விதிக்கப்பட்டு யாழ்.சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (க-86)


## 250 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள்!

தென்மராட்சி,பெப்.1

மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த 250 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் அண்மையில் அம்பன் வைத்திய சாலையில் வைத்து வழங்கப்பட்டன.

யாழ்.பிராந்திய மலேரியா தடுப்புப் பிரிவினரால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டதாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ந.ஞானசுதன் தெரிவித்தார். (க-117)

# கல்விச்சாலைக் காட்சிகள்



தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியின் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் மு.சொர்ணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் மங்களவிளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை முதல்வர், முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஐ-9)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்துக்கு கனடா பழைய மாணவர் சங்கக் கிளையின் ஆதரவில் ஒன்பது பரப்புக்காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இடம்பெற்ற காணி உறுதி கையளிப்பு நிகழ்வு ஒன்றில் பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளைத் தலைவர் நு.இராமச்சந்திரன், வித்தியாலய அதிபர் செல்வி பா.மார்க்கண்டுவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் உபஅதிபர் இ.அருணகிரிவாசன், பழையமாணவர்களான செ.நடராசா, திருமதி மு. ஜானகி, தா.தியாகமூர்த்தி ஆகியோர் காணப்படுகின்றனர்.



சுன்னாகம் றோ.க.த.க பாடசாலையின் பரிசளிப்புவிழாவும், ஒளிவிழாவும் அண்மையில் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறுவர்கள் "ஆங்கிலப் பாடல்" ஒன்றைப் பாடுவதைப் படத்தில் காணலாம். (ஐ-9)



16 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வலிகாமம் வலயப்பிரிவில் முதலிடம் பெற்று மாவட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஸ்கந்தவரோதயக் கல்லூரி வீரர்களைப் படத்திற்காணலாம்.

மாணவர்களோடு கல்லூரி முதல்வர் சிவாஜி, பொறுப்பாசிரியர்களான நடராஜா, ஜோர்ஜ், நந்தீஸ்வரன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஐ)

ஆசிரிய சேவையினைப் பாராட்டி

## வாழ்த்துகின்றோம்

கல்விச் சேவையில் 25 வருடங்களை நிறைவுசெய்து
இன்று *வெள்ளிவிழாக்* காணும் எமது
உபஅதிபர் **திரு.ந.நகுலநாதன்** அவர்களையும்
*ஆசிரிய சேவை தரம் 1இற்குப* பதவி உயர்வு பெற்றுள்ள
சிரேஷ்ட ஆசிரியர் **திரு.ச.சிவபாதவிருதயர்** அவர்களையும்
மனம் நிறைந்து பாராட்டுவதுடன், வளம் பல பெற்று
மேன்மேலும்
சிறப்புற இறையாசி வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யாழ்.நாவாந்துறை றோமன் கத்தோலிக்க
(191) வித்தியாலயம்.

# அரசாங்க அறிவித்தல்

## உள்ளூராட்சி சபைகள் தேர்தல்கள் - 2002
## நியமனங்கள் ஏற்றல்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கீழ்வரும் 16 உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் தொடர்பான நியமனங்கள், 2002 பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2002 பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை எனது அலுவலகத்தில் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் என 2002 ஜனவரி மாதம் 18ஆம் திகதி நான் அறிவித்திருந்தேன்.

தவிர்க்கமுடியாத காரணங்களினால் மேற்படி நியமனங்கள் யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிரதேச செயலரின் அலுவலகத்தில் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தற்பொழுது அறிவித்துக்கொள்கின்றேன்.

1. யாழ்ப்பாணம் மாநகரசபை
2. வல்வெட்டித்துறை நகரசபை
3. பருத்தித்துறை நகரசபை
4. சாவகச்சேரி நகரசபை
5. நெடுந்தீவு பிரதேச சபை
6. வேலணை பிரதேச சபை
7. ஊர்காவற்றுறை பிரதேச சபை
8. வலிகாமம் மேற்கு பிரதேச சபை
9. வலிகாமம் வடக்கு பிரதேச சபை
10. வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
11. வலிகாமம் தெற்கு பிரதேச சபை
12. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
13. வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை
14. பருத்தித்துறை பிரதேச சபை
15. சாவகச்சேரி பிரதேச சபை
16. நல்லூர் பிரதேச சபை

**எஸ்.நடராசா**
உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ்ப்பாணம் மாவட்டம்.

தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2002 ஜனவரி 31ஆம் திகதி (C/20570)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பிரட்மோகன் செல்வமலர்

திருமதி பிரட்மோகன் செல்வமலர் நேற்று (31.01.2002) வியாழக் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரட்மோகனின் (லண்டன்) அன்பு மனைவியும், கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகசபை, இரத்தினம்மா தம்பதியர்களின் மகளும் காலஞ்சென்ற திருமதி K.மங்கையர்க்கரசி, க.பாலச்சந்திரன் (லண்டன்), திருமதி T.செல்வமணி, திருமதி S.செல்வராணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி B.இந்திராணி (லண்டன்), S.தங்கராசா, S.சுவான்பேர்க் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரதநிலைய வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (197)

*தகவல்:*
சகோதரியும், மைத்துனரும்
திரு.திருமதி தங்கராசா.

## வேலுப்பிள்ளை பாலசுந்தரம்

*(காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)*

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பாலசுந்தரம் (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை டுபாயில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை (ரயில்வே திணைக்களம்) - காலஞ்சென்ற செல்லம்மா தம்பதியினரின் மூத்த மகனும் சர்வேந்திரன் (டுபாய்), சுகிர்தரஞ்சனி, அகிலரஞ்சனி, சுகேந்திரன் (டுபாய்), ரஜினி ஆகியோரின் அருமைச் சகோதரரும் இராசேந்திரம், கமலநாதன், நித்தியகலா (டுபாய்) ஆகியோரின் மைத்துனரும் தனுஷன், பிறேமினி, ஜிந்துஜா ஆகியோரின் மாமனாரும் மீனஹர்நி, மீனலக்ஷன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2002) சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
கு.கமலநாதன்,
தி.இராசேந்திரம்
*(மைத்துனர்).*

*53, சங்கரப்பிள்ளை வீதி,*
*மானிப்பாய்.* (195)

## காரைநகரில் மகேஸ்வரனுக்கு வரவேற்பு

ஊர்காவற்றுறை, பெப்.1

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இந்து கலாசார அமைச்சருமான தி.மகேஸ்வரனை பாராட்டி கௌரவிக்கும் முகமாக காரைநகர் வாழ் மக்களால ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வரவேற்பு வைபவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காரைநகரில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு வலந்தலைச் சந்தியில் இருந்து அமைச்சர் தி.மகேஸ்வரன் மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு அழைத்துச் செல்லப் படுவார்.

அங்கு இடம்பெறும் விசேட பூஜை வழிபாட்டினைத் தொடர்ந்து யாழ்ற்ரன் கல்லூரியில் அவருக்கு விசேட வரவேற்பு அளிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து கல்லூரியில் இடம்பெறும் விசேட நிகழ்ச்சியிலும் அவர் கலந்துகொள்வார்.

(க-16)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுப் பட்டமளிப்பு
## 2002–03–16
## (21ஆவது)

கலாநிதி/முதுமாணி/பட்டங்கள்/ டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 2002.03.16 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் பட்டங்கள்பெறத் தகுதியுடையவர்கள் 2002.02.28 இற்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

01. கலாநிதித் தேர்வு.
02. முதுதத்துவமாணித் தேர்வு.
03. கல்வி முதுமாணித் தேர்வு.
04. வைத்தியமாணி, சத்திரசிகிச்சை மாணித் தேர்வு.
05. வணிகமாணித் தேர்வு.
06. தொழில் நிர்வாகமாணித் தேர்வு.
07. விஞ்ஞானமாணித் தேர்வு (சிறப்பு)- (ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத்தேவையில்லை).
08. கலைமாணித் தேர்வு (பொது/ சிறப்பு).
09. இசை, நாட்டிய கலைமாணித் தேர்வு.
10. நுண்கலைமாணித் (இசை/ நடனம்) தேர்வு.
11. விவசாய விஞ்ஞானமாணித் தேர்வு.
12. விஞ்ஞான தகைமைச் சான்றிதழ்.

வேண்டுகோள்களை மேற்குறிப்பிட்டதிகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகோள் படிவங்களையும் மற்றும் விவரங்களையும் முத்திரை ஒட்டிய 23x10 செ.மீ. அளவுடைய சுய விலாசமிடப்பட்ட கடித உறையை "உதவிப் பதிவாளர், தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.

மேலும் படிவங்களைக் கீழ் வரும் முகவரிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

01. வவுனியா வளாகம்,
புகையிரதநிலைய வீதி,
வவுனியா,

02. கொழும்பு களஞ்சியம்/ காரியாலயம்
EG4, மத்திய வீதி,
கொழும்பு -12.

**பதிவாளர்.** (C/20574)

# நல்லூர் வணிகர் கழகம்
## முக்கிய அறிவித்தல்

நல்லூர் வணிகர் கழகத்திற்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களையும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுமையாகப் பூட்டி ஒத்துழைக்கும்படியும், இதை மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மன வேதனையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*குறிப்பு:-* 1. நல்லூர் வணிகர் கழகத்தின் சகல வர்த்தக நிலையங்களுக்கும் இரவு பாதுகாப்புச் சேவை வழங்கப்பட இருக்கிறது.
2. உடனடியாகப் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு வெற்றிடம் உண்டு.
3. 1995ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு பற்றிய விவரங்களைக் காரியாலயத்தில் அறியலாம்.

நிர்வாகத்தினர், நல்லூர் வணிகர் கழகம்,
(194) *திருநெல்வேலி கிழக்கு.*

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு.மா.ஞானலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி மாணிக்கம் அன்னம்

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு நாம் மிகவும் கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.
(196) **யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.**

# துயர் பகிர்கின்றோம்

தெல்லிப்பழை அதிபர் சங்கச் செயலாளர்
**திரு.க.கனகராஜா** அவர்களின்
அன்புத் தந்தையார்
**அமரர் க.கந்தையா** அவர்கள்
இறைபதம் எய்தியமையையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன், அவரது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் சங்கம்,
தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம்.

உதவிக் கல்விப்
பணிப்பாளர், அதிபர்கள்,
முதன்மை ஆசிரியர்கள்,
ஊழியர்கள். (187)

பனைவள அபிவிருத்திக்குத் தொண்டாற்றி மறைந்த பெரியார்களான
அமரர்கள்
கே.சம்பந்தம், க.கனகராஜா, ஜீ.நல்லையா,
சு.நடேசு, சி.க.வேலாயுதபிள்ளை,
க.சி.குலரத்தினம், சு.பரநிருபசிங்கம்
ஆகியோரின்

# நினைவஞ்சலிக் கூட்டம்

*காலம்:*
01.02.2002 வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணி.

*இடம்:*
யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடம்

*தலைமை:*
உயர்திரு.பொ.சிவபாதம்
*(தலைவர், பனை அபிவிருத்திச் சபை)*

*பிரதம விருந்தினர்:*
*இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு*
**தி.மகேஸ்வரன்** அவர்கள்

*சிறப்பு விருந்தினர்கள்:*
திரு.க.சண்முகநாதன் அவர்கள் *(யாழ். அரசாங்க அதிபர்)*
திரு.து.வைத்திலிங்கம் அவர்கள் *(யாழ். மேலதிக அரசாங்க அதிபர்)*
திரு.எஸ்.கனகசபாபதி அவர்கள்
*(கூட்டுறவு அ.உ. ஆணையாளர் - அபிவிருத்தி)*
திரு.சு.கணேசமூர்த்தி அவர்கள்
*(கூட்டுறவு அ.உ. ஆணையாளர் பனைவளம்)*

*கௌரவ விருந்தினர்கள்:*
திரு.சி.சிவமகாராசா அவர்கள்
*(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டுறவாளரும்)*
திரு.கி.தவராசா அவர்கள்
*(தலைவர், வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்)*

*நினைவுப் பேருரை:*
*"பனைவளம்"*
கலாநிதி எஸ்.சிவலிங்கராசா அவர்கள்
*(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*


*நினைவுரைகள்:*
திரு.வி.ஜீ.தங்கவேல் அவர்கள்
*(ஆலோசகர், பனைதென்னைவளம், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம்)*
திரு.கோ.சி.வேலாயுதம் அவர்கள்
*(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்)*
திரு.க.இராஜதுரை அவர்கள் *(அதிபர், யாழ்.மத்திய கல்லூரி)*
திரு.க.திருநாவுக்கரசு அவர்கள் *(ஓய்வுபெற்ற அதிபர்)*
திரு.ஏ.கே.சிவசுப்பிரமணியம் அவர்கள்
*(பிரதிநிதி, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்)*
திரு.சோ.பத்மநாதன் அவர்கள்
*(முன்னாள் அதிபர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)*
திரு.க.சொக்கலிங்கம் (எம்.ஏ.) அவர்கள் *(முன்னாள் அதிபர்)*

**விழா அமைப்புக்குழு**
**பனை அபிவிருத்திச் சபையும், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், சமாசமும்.**
(C/20569)

# ஒப்புரவாளர் விருது





'ஒப்புரவாளர்' விருது வழங்கும் வைபவம் கடந்த திங்களன்று நல்லூர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் ஆகியோருக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள் விருது வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

விழாவில் கலந்துகொண்ட யாழ்.தேசிய கல்வியில் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன், யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி அ.சண்முகதாஸ், ஆசிரியர் ஆறு.திருமுருகன், ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர்.

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், புனர்வாழ்வு அதிகார சபையின் வதிவிடப் பொறியியலாளர் ப.கிரிதரன் ஆகியோருக்கும் 'ஒப்புரவாளர் விருது' வழங்கப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத காரணங்களால் இவர்கள் இருவரும் விழாவில் சமுகமளித்து விருதைப் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

*(படங்கள்: பொ. இராஜேஸ்வரன்)*

## படையினர் எடுத்துச்சென்ற
# சாவகச்சேரி நகரசபை டிராக்டர் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை
## துப்புரவுப் பணிகளை ஆரம்பிக்க முடியாதநிலை

தென்மராட்சி,பெப்.1

சாவகச்சேரிப் பகுதியில் யுத்தம் ஆரம்பித்தவேளையில் படையினரால் எடுத்துச்செல்லப்பட்ட சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான டிராக்டர் இதுவரை மீளவழங்கப்படாததால் நகரசபையினால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட சுகாதார சேவைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது.

ஒன்றரை வருடங்களின் பின்னர் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது வீதிகள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றபோதிலும் வாகனவசதி இல்லாததால் வீதிகளில் குப்பைகள் குவிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

யுத்தத்தின்போது சேதமடைந்த வீடுகளிலிருந்து அகற்றப்படும் பெருமளவு கூரை ஓடுகளும், கட்டடக் கழிவுகளும், காணிகளில் இருந்து துப்புரவு செய்யப்பட்ட குப்பைகூழங்களும் வீதிகளில் பெருமளவு குவிக்கப்பட்டு வருவதால் அவற்றினை அகற்றமுடியவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

டிராக்டரை மீளப்பெறுவதற்கு பல தடவைகள் உயர் அதிகாரிகளுக்கு முறையிட்டும் இதுவரை பயன்கிடைக்கவில்லை என்று நகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-117)

# அனுமதிப் பத்திரமின்றி மரம் ஏற்றிவந்த இருவர் தாவடிப் பகுதியில் சிக்கினர்
## டிராக்டரையும் கைப்பற்றினர் பொலீஸார்

சட்டவிரோதமான முறையில் மரம் ஏற்றிவந்த இருவர் சுன்னாகம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

தாவடிப் பகுதியில் வேப்பமரங்களுடன் வந்த டிராக்டர் ஒன்றை மறித்துச் சோதனை மேற்கொண்டபோது அவர்களிடம் அராங்க மரக் கூட்டுத்தாபனத்தின் அனுமதிப்பத்திரம் இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டது.

மரம் ஏற்றிவந்த கொக்குவிலைச் சேர்ந்த செ.உதயகுமார், இ.சுவேந்திரன் ஆகிய இருவரும் கைதுசெய்யப்பட்டதுடன் டிராக்டரும் கைப்பற்றப்பட்டது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் இருவரும் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ளனர். (க-86)

## மேசைப்பந்தாட்டம்

வடமராட்சி, பெப்.1

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான ஆண்கள், பெண்கள் பங்கு பற்றும் மேசைப் பந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (க-86)

# திக்கம் வடிசாலை உற்பத்திகளுக்கான மதுவரித் தீர்வை முற்றாக நீக்கப்படும்
## அதிகாரிகளிடம் அமைச்சர் மகேஸ்வரன் உறுதி

யாழ்பாணம்,பெப்.1

திக்கம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்பட்டுவரும் மதுபானங்களுக்கான மதுவரித்தீர்வை முற்றாக நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மகேஸ்வரன், மதுவரித் திணைக்கள அதிகாரிகளிடம் உறுதியளித்துள்ளார்.

முன்னர் திக்கத்தில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு போத்தல் மதுபானத்திற்கும் 90வீத மதுவரித் தீர்வை அறவிடப்பட்டு வந்தது. தற்போது அது 50வீதமாக குறைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இந்தத் தீர்வையையே முழுவதுமாக இல்லாது செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு நூறுவீதமும் மதுவரித் தீர்வை இல்லாது செய்யப்படுமாயின் உள்ளூர் பனஞ்சாராய வகைகளின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (க-9)

# தவறவிட்ட அ.அட்டைகள் யாழ்.பொலீஸ் நிலையத்தில்!

யாழ்நகரின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகை அடையாள அட்டைகள் யாழ்.பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்களின் பெயரும் அவற்றில் காணப்படும் முகவரியும் வருமாறு:-

* நடராசா திருவேலழகன் (773173621v, வதிரி, கரவெட்டி).
* சிவஞானம் தனலெட்சுமி (726470570v, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்).
* நவரத்தினம் ஆறுமுகசாமி (552952251v, பிரான்பற்று, சங்கானை).
* சீவரத்தினம் மணிபல்லவன் (772763760v, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி).
* சிற்றம்பலம் நல்லம்மா (335412842v, சந்தா தோட்டம், புலோலி வடகிழக்கு).
* குமரேசு பொன்னையா கனகலிங்கம் (471002798v, சீனிவாசகம் லேன், கொட்டடி).
* பென்னையா கசிதா (788014538v, 8ஆம் யுனிட், தருமபுரம் கிழக்கு).

விசேட அடையாள அட்டைகளைத் தவறவிட்டவர்களின் பெயர் விவரம்:-

* பொன்னம்பலம் சக்திவேல் (பேரின்பநாயகம் வீதி, கண்டிவீதி, அரியாலை).
* செபமாலை கனிசியஸ் (மெலிஞ்சிமுனை மேற்கு, ஊர்காவற்றுறை).
* சிவக்கொழுந்து நாகராசா (தோப்பு வீதி, மட்டுவில் வடக்கு).
* சிற்றம்பலம் நல்லம்மா (சந்தா தோட்டம், புலோலி).
* முத்துகுமாரு நடராஜா (பழைய கண்டி, காரைநகர்).
* விஸ்வலிங்கம் சிவானந்தம் (அராலி வடக்கு, வட்டுக்கோட்டை).
* இராசா சச்சிதானந்தம் (குருநாதசாமி கோயிலடி, வித்தகபுரம்).
* தவராசா ராசாத்தி (இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்).
* விசுவநாதர் தணிகாசலம் (சிவன்கோயிலடி, புத்தூர் மேற்கு).
* சின்னராசா சதீஸ்வரன் (முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை).
* ஐயாத்துரை விக்னேஸ்வரன் (அண்ணமார் கோயிலடி, இணுவில் கிழக்கு).

அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள் தமது பகுதிக் கிராம சேவகரது அத்தாட்சிக் கடிதத்துடன் யாழ்.பொலீஸ்நிலையத்திற்கு வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று பொலீஸார் தெரிவித்தனர். (க-6-9)

## மதில் வீழ்ந்து படுகாயம்

யாழ்ப்பாணம்,பெப்.1

திருடனைப் பிடிப்பதற்காக மதிலைத் தாவிக்கடக்க முற்பட்டவர் மதில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச சம்பவத்தில் சுன்னாகம் முடமாவடியைச் சேர்ந்த நடராசா ரவிச்சந்திரன் (வயது-32) என்பவரே படுகாயமடைந்தார். இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

அயல் வீட்டில் திருட வந்த இருவரில் ஒருவரை ஏனையோர் மடக்கிப் பிடித்துவிட்டனர் என்றும் - மற்றைய நபர் சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டார் என்றும் - காயமடைந்த ரவிச்சந்திரன் தெரிவித்தார். (க-6)

# நாம பஜனை ஒன்றேதான் நம் பிராணனுக்கு ஆதாரம்

**ஞானக்கதிர்**

**சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்**

இப்பரந்த நிலவுலகின்கண்ணே மனிதப்பிறவி எடுத்த நாம் உண்மையில் பாக்கியசாலிகளே! ஏனெனில் மானிடப்பிறவி ஒரு மகத்தான உன்னத பிறவி. 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பது ஔவையின் கூற்று. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்றபடி கிடைத்தற்கரிய பிறவியான மானிடப் பிறவி எடுத்த நாங்கள் அதன் பயனைப் பெறுதல் மிக அவசியமாகின்றது.

*குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்*
*இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே -*

என்பது அப்பர் திருவாக்கு.

இறைவனுடைய திருவடிப்பேற்றை அடைவதற்கும் அவனது அழகைக் கண்டு கண்குளிரத் தரிசிப்பதற்கும் இந்த மனித உடல் தேவைதான். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த இறைவனை நாம் சதா நினைந்து வழிபாடியற்ற வேண்டும். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதை மறக்கலாகாது. ஆகவே நாம், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அவன் நாமத்தை உச்சரிக்க வேண்டும். 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்பது நம் உள்ளங்களில் திகழ வேண்டும். அதாவது "இறைவா! உன்னை நான் மறந்துபோய் விட்டாலும் என்னுடைய நாக்கு உன்னை மறக்காமல் 'சிவாயநம' என்று உச்சரித்துப் பழக்கப்பட்டுவிட்டது" என்பது நாயனார் கூற்று.

ஆகவே, இறை நாம பஜனை மூலம் நாம் நம் மனத்தை அடக்கியொடுக்கி ஒரு நிலைப்படுத்தலாம். கூட்டுப்பிரார்த்தனை மிகவும் சக்தி வாய்ந்தது. ஒற்றைக்கையில் ஓசை கிடையாது. இரண்டு கைகளும் சேர்ந்தே ஒலி எழுப்பமுடியும். ஒற்றுமையே பலம் இதை நினைவிற்கொள்ளவேண்டும்.

ஆகவே, இன்றைய காலகட்டத்தில் நமது துன்ப துயரங்கள் அகலவும் இடுக்கண்கள் நீங்கவும் ஒரே வழி இறை நாம பஜனையே. 'சேரவாரும் ஜெகத்தீரே' என அழைத்து ஓர் அஞ்ஞான வேண்டுகோள் விடுக்கின்றார் அப்பரடிகள்.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசைப் பாடல் மறந்தறியேன் நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்நாமம் என் நாவில் மறந்தறியேன்" என்பது அவர் தேவாரம். இதுதவிர திருவங்கமாலைப் பதிகத்திலே மனிதருடைய ஒவ்வோர் அவயவத்துக்கும் அவர் வேலை கொடுக்கின்றார்.

'தலையே நீ வணங்காய்' என்று தொடங்கி வாய், கண், மூக்கு, காது, கை, கால், உடம்பு என இன்னோரன்ன பகுதிகளுக்கும் தொண்டுசெய்யுமாறு பணிக்கின்றார். அது மட்டுமன்றி இஃது நாம் செய்த பாக்கியம் என்றும் பகர்கின்றார். அவரது பட்டறிவிலிருந்து வந்த உண்மை இது.

"மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்வேன்; கனிதந்தால் உண்ணவும் வல்லீரே" என்று பரிவுடன் விழிக்கின்றார். கனியிருப்பக் காய் கவர வேண்டாம். அதாவது 'பாற் கலன் மேற் பூனை' என உமாபதி சிவாசாரியார் குறிப்பிட்டது போன்று பால் நிறைய இருந்தும் அதனைப் பருகாமல் கரப்பான் பூச்சியை நாடுகின்ற பூனைக்கு நம்மை ஒப்பிடுகின்றார். திருவருளில் வாழ்ந்துகொண்டே நாம் திருவருளை அறியாமல் ஆணவ முனைப்பில் அழுந்திக்கிடக்கின்றோம். அந்த ஆணவ முனைப்பு நீங்குவதற்கு ஆண்டவன் நினைப்பு வரல்வேண்டும்.

அப்போதுதான் நம்மை நாமே உணரமுடியும். பிறருடைய குற்றங்கள்ள நாம் பெரிதுபடுத்துவதன் முன் நம்முடைய குற்றங்களை அறிந்து திருந்த வேண்டும். நாம் திருந்துவதற்கு இறை நாம பஜனை செய்வதுதான் சிறந்தமார்க்கம். அதைவிடச் சிறந்த வழி கிடையவே கிடையாது.

மனம் பொறிவழி போகாது கட்டுப்படுவதற்கு ஆண்டவனே துணை புரிவான். குரங்கு மனத்தை முதலில் அடக்கவேண்டும். அது அடங்குவதற்கு கூட்டுப்பிரார்த்தனை செய்யவேண்டும். அவ்வாறு இறை நாமத்தை உச்சரிக்க உச்சரிக்க நமது பாவங்கள் விலகும், துன்பங்கள் தொலையும், துயரங்கள் நீங்கும்.

வாழ்வில் சலிப்புத் தோன்றி விரக்தி ஏற்படும் போது கைகொடுக்கும் ஒரே மருந்து பஜனையே. அந்தச் சஞ்சீவிக்கு ஈடுஇணை கிடையா. நாம பஜனை ஒன்றேதான் நம் பிராணனுக்கு ஆதாரமாக விளங்குகின்றது.

எனவே பிரபஞ்ச சாகரத்தில் மூழ்கித் தவிக்காமல் பிறவிப் பிணிதீர இறைநாம பஜனை செய்து சதுர்வித புருஷார்த்தங்களை அடைய வழி சமைப்போமாக. ☆

# சின்னஞ்சிறு விளம்பரம்

## புதிய நூல்

"ஆற்றல் பல நல்கும் ஆஞ்சநேயர்" விலை ரூபா 40. கோப்பாய் சிவம் எழுதியது. ஆஞ்சநேயர் வழிபாட்டு முறைகள், விளக்கங்கள் அடங்கியது. பிரபல புத்தகக்கடைகளில் பெறலாம். (077)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதுடைய செவ்வாய் தோஷமற்ற, 5' 7" உயரமுள்ள, அழகிய சிவந்த நிறம் பொருந்திய, பட்டதாரி மணப்பெண்ணுக்குத் தகுந்த PROFESSIONALLY QUALIFIED மணமகனை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ தேடுகின்றார்கள். ஆஸ்திரேலியா, கனடா விரும்பத்தக்கது. ஜாதகக் குறிப்புடன் தொடர்பு:- விள.இல. 1444, மே/பா உதயன். (116)

அரச கணக்காளர், 29 வயது, பூரம் குற்றமற்ற, பொது நிறம், அழகான, சைவ, கௌரவ குடும்ப, சீதனமுள்ள, ஆங்கிலப் பட்டதாரிப் பெண்ணுக்கு தகுந்த உள்ளூர் அரச உத்தியோக மணமகன் தேவை. விளம்பர இல. 1446, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (170)

## இலக்கியக் கட்டுரைகள்

A/L மாணவர்களே! உங்களது ஐந்து சிறுகதைகளுக்கும் விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. மற்றும் சிறுகதை, நாவல், குறுநாவல், நாடகம், இலக்கிய விமர்சனம் ஆகியவற்றுக்கு தனித்தனியான பகுதிகளில் விளக்கங்கள். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையால் எழுதப்பட்டுள்ளன. (080)

## விற்பனைக்கு

இரண்டு பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன் புதிய வீடும், ஆனைகோட்டையில் முப்பத்தாறு பரப்பு வயல் காணியும், வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம். தொடர்பு: இ.சிவனேஸ்வரி (சந்திரா), பிள்ளையார் கோயில் லேன், தாவடி. (128)

முழுக்கச்சான் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு சே.கிருஷ்ணகுமார், விதானைவளவு. மானிப்பாய். (140)

நல்ல நிலையிலுள்ள ஹொண்டா-90 (சிவப்பு) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி.அருளம்பலம், இல.518, கே.கே.எஸ். வீதி (மனோஹரா தியேட்டர் முன்பாக), யாழ்ப்பாணம். (169)

பகிறா இன புறோயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி. குணபாகன், இல.4, கொழும்புத்துறை வீதி, கண்டுக்குளி: இல.1014, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 3353 (180)

## தவறிவிட்டது

இல.8, 3ஆம் குறுக்குத்தெரு, பாஷையூரைச் சேர்ந்த K.ஜோசியின் வி.அ.அ.(இல.901019240), K.தவசெல்வத்தின் வ.அ.அ. (இல.901032631) என்பன இல.769 பஸ்ஸில் போகும் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (152)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டுவேலை செய்ய 20-35 வயதுக்குட்பட்ட பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். நேரில் வரவும்.

இ.வி.ராஜன்
நிரு ரியூசன் சென்ரர் முன் ஒழுங்கை.
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு. (173)

## தேவை

எமது தொழிலகத்துக்கு வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்கள தேவை.
05-02-2002 செவ்வாயன்று நேரில் வரவும்.

**ஸ்ரீ மாருதி ஸ்ரார் இனிப்புத் தொழிலகம்**
6/12, வீதானையார் வீதி, ஈச்சமோட்டை. (172)

---

# நீங்காத நினைவலைகள்

16ஆம் ஆண்டு — 2ஆம் ஆண்டு





அமரர் **வேலுப்பிள்ளை கந்தையா** (கந்தமுத்து)
(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர், வட்டுக்கோட்டை.)

திருமதி **கந்தையா பாக்கியலட்சுமி**

*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.*

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.* (115)

---

# இரண்டாம் ஆண்டு மகிமையான நினைவுகள்

ஆண்டவர் பாதத்தில் ஊற்றுண்ட பரிமளதைலமே



| தாயின் கையில் | ஆண்டவரின் கையில் |
|---|---|
| 20 | 01 |
| 04 | 02 |
| 1983 | 2000 |

பரி.யோவான் கல்லூரி மாணவன்

## ஜோய் கவின்சன் பேணாட்

Lower School Athletic Captain
Middle School S.P.

"இதோ என் சாட்சி பரலோகத்திலிருக்கிறது எனக்கு சாட்சி பகருகிறவர் உன்னதங்களில் இருக்கிறார்."
என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன் அவரை நானே; பார்ப்பேன் அந்நிய கண்கள் அல்ல; என் கண்களே அவரைக் காணும்.

A.J.செல்வரத்தினம் (பேரன்)

*15. கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.* (166)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 27 | 24 |
| 07 | 01 |
| 1947 | 2001 |

அமரர்

## இராமுப்பிள்ளை இரத்தினம்

*பாசத்தின் சுமையோடு*
*கணப்பொழுதில் மறைந்தீரே அப்பா!*
*ஆறாத வேதனையில்*
*ஆண்டொன்று சென்றதே அப்பா!*
*மீளாத நினைவு தன்னில்*
*நெஞ்சம் தவிக்குதப்பா!*
*இறைவனுடன் சேர்த்தெம்மை*
*வழிநடத்த வேண்டுகிறோம்.* (161)

இன்று (01-02-2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*ஐயனார் வீதி, சண்டிலிப்பாய்.*
நிரந்தர முகவரி:
*மீசாலை கிழக்கு, மீசாலை.*

உங்களை நினைவுகூரும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், கண்ணன் (மகன்-லண்டன்)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்
நன்றி நவிலலும்



| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 25 | 02 |
| 10 | 01 |
| 1948 | 2002 |

## அமரர் ஆசைப்பிள்ளை தங்கவேல்

*(K.A.T. உரிமையாளர், அச்சுவேலி)*

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த ஐயாவே!*
*நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு*
*எங்கள் நெஞ்சைவிட்டு ஒருபோதும்*
*அகலவே அகலாது' நிறைந்திருக்கும்.*
*ஆத்மா சாந்தி அடைவதாக.*

இன்று (01.02.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் திடீர் மறைவுச் செய்திகேட்டு எமது இல்லம் நாடி வந்து எமது துக்க துயரத்தில் பங்குகொண்டு, எமக்கு ஆறுதல் அளித்து பல் வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

★ இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்று சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
திருமதி த.திருநிறைந்தசெல்வியும் குடும்பத்தினரும்.

*அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.* (143)

---

# 31ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 | 02 |
| 10 | 01 |
| 1947 | 2002 |

இரசாயனவியல் வித்தகர்

## ஆறுமுகம் மகாதேவன்

B.Sc., Dip. IN EDU., S.L.E.A.S.
(விரிவுரையாளர் - பலாலி ஆசிரிய கலாசாலை, முன்னாள் ஆசிரியர் - யாழ்.இந்துக் கல்லூரி)

அமரரின் உரும்பிராய் இல்லத்தில் இன்று (01.02.2002) வெள்ளிக்கிழமை மு.ப.10மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

*"மங்கள பவனம்",*
*சந்திரோதய வித்தியாசாலையடி,*
*உரும்பிராய் - மானிப்பாய் றோட்,*
*உரும்பிராய்.* (163)

திருமதி ம.மகாதேவன் (மனைவி),
திரு&திருமதி குணரத்தினம் (மாமா, மாமி).

---

# நெஞ்சைவிட்டகலாத 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 | 04 |
| 12 | 01 |
| 1943 | 2002 |

## அமரர் இராசரத்தினம் மகேந்திரராசா

(முன்னாள் மேற்பார்வையாளர், இலங்கை உப்புக்கூட்டுத்தாபனம்)

**அன்புத் துணைவராய், பாசமிகு தந்தையாய்**
**எமக்கு நல்வழி காட்டிய எமது அன்புத் தெய்வமே!**
**நீங்கள் மறைந்து ஒரு மாதம் சென்றாலும் உங்களது**
**அன்பு நினைவலைகள் எம் நெஞ்சைவிட்டு நீங்காது!**

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரரின் நினைவாக எதிர்வரும் (03-02-2002) ஞாயிற்றுக்கிழமை நிகழும் அந்தியேட்டி நிகழ்விலும், எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதியபோசனம் ஆகியவற்றிலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு: இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்று சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

*உளுத்தம்பி, வல்வெட்டி.* (131)

அன்பு மனைவி, பாசமிகு பிள்ளைகள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்றுமுதல் (01-02-2002) இலங்கை கணக்காளர் சேவை
வகுப்பு II தரம் II இற்கு நியமனம் பெறும்
எமது நண்பன்,

புலோலியூர் **திரு.சிங்காரவடிவேல் குகபாலன்** B.B.A. (Hons)

அவர்களை உளமாரப் பாராட்டி மகிழ்வதோடு அவர் மேன்மேலும் வாழ்விலும், பதவியிலும் சிறக்க வேண்டுமென இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

வலயக்கல்வி அலுவலகம். - நிதிக் கிளை நண்பர்கள்.
யாழ்ப்பாணம். (206)



## தாதியர் தின, மருத்துவர் தின வாழ்த்துகள்

1900களின் முற்பகுதியில், யாழ்ப்பாணம் தலைமை வைத்திய சாலையில் தாதியப் பணிபுரிந்த, கிறிஸ்தவ சகோதரிகளிடம் நமது சகோதரி ச.பொன்னம்மாவைத் தாதியப் பயிற்சி பெற வைத்து, யாழ்ப்பாணத்தின் முதலாவது தாதியாக்கி, அக்காலத்தில் மருத்துவம் சார்ந்த பணிகளில் ஈடுபடத்தயங்கிய பெண்களின் தயக்கத்தை நீக்கிய, *தசாவதானி சரவணமுத்து ஆறுமுகம் அவர்களின் நினைவு தினமான பெப்ரவரி முதலாம் திகதி தாதியர் தினமாகவும், மருத்துவர் தினமாகவும் கொண்டாடப்பட்டு* வருகிறது. தாதியரும் மருத்துவரும் பல சிறப்புகளுடன் வாழ இத்தினத்தில் வாழ்த்துகின்றோம்.

**சிவா நறுமணப் பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி,
*தொலைபேசி:2567* யாழ்ப்பாணம். (C-20575)



## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி
## விண்ணப்பம் கோரல்

2002 மாசி மாதம் ஆரம்பமாகவுள்ள கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர்பிரிவுப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தினை ரூபா 10/- செலுத்தி கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15/02/2002

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, - அதிபர்.
இல.14,மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/20576)



## 31ஆவது நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின் பழைய மாணவரும்,
பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
விரிவுரையாளருமான



**ஆறுமுகம் மகாதேவன்**

அவர்கள் மறைவுக்கு எமது கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்சார்பில் கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
(205) யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.


# இறுதி வருடப் பரீட்சையில் தோற்ற திவ்வியனுக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதிவருட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் அவரது பட்டப்படிப்பின் இறுதி ஆண்டுப் பரீட்சையில் தோற்றுவதற்கு யாழ்.மேல்நீதி மன்ற நீதிபதி கே.பி.எஸ்வரதராஜா நேற்று அனுமதி வழங்கினார்.

பரீட்சைக்குத் தயாராவதற்கும் மற்றும் பரீட்சை எழுதுவதற்கும் வேண்டிய உதவிகளை திவ்வியனுக்கு வழங்குமாறும் -

இது தொடர்பாக அவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது நண்பர்கள் புத்தகங்கள், குறிப்புகள், வினாக்கொத்துகள், எழுதுகருவிகள் மற்றும் தாள்களை வழங்க அனுமதிக்குமாறும் -

யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதிபதி கட்டளை பிறப்பித்தார்.

எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகும் இறுதியாண்டுப் பரீட்சையில தோற்றுவதற்கும், அதற்குத் தயாராவதற்கும் வேண்டிய ஒழுங்குகளை திவ்வியனுக்கு ஏற்படுத்திக் கொடுக்குமாறு யாழ். சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிடுமாறு திவ்வியன் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் விண்ணப்பத்தை ஏற்றே இந்த உத்தரவை நீதிபதி பிறப்பித்தார். (ஒ-6-ரி)

# இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் கருத்தரங்குத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புவியியற்றுறை மண்டபத்தில் நடக்கும் கருத்தரங்கில் "பல்கலைக்கழக மாணவர் தெரிவில் 'இசற்' கணிப்பீட்டுமுறை" என்னும் தலைப்பில் பொருளியற்றுறைத் தலைவர் வி.பி. சிவநாதன் உரையாற்றவிருக்கின்றார். (ஐ-3)

# திருகோணமலையில் நேற்று பகிஷ்கரிப்பு

திருகோணமலை,பெப்.1

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அந்த மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இந்தப் போராட்டத்தில் இணைந்ததால் பாடசாலைச் செயற்பாடுகள் யாவும் சீர்குலைந்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-3)


**ராஜா** யாழ்ப்பாணம்
கமலஹாசன், சிம்ரன்,
ஸ்நேகா, அப்பாஸ்
நடிப்பில்
**பம்மல் K சம்பந்தம்**
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2, 5 (பு.நே.)
(C/20571)

**நிறைஞ்சனாஸ்** சாங்கானை
சரத்குமார், மீனா நடித்த
**ரிஷி**
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-20572)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், பூமிகா, மோனல், விவேக்,
மற்றும் பலர் நடித்த
**பத்ரி** (ரீலீஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)
(193)


## கண்ணீர் அஞ்சலி

நெடுந்தீவின் பிரபல வர்த்தகரும்
அரசாங்க ஒப்பந்தக்காரரும் சமூக சேவையாளருமாகிய

**ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை**
(சந்தைக் கடை உரிமையாளர்)

அவர்கள் காலமானதையிட்டு மிகுந்த கவலைஅடைகின்றோம் அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அமரர் சு.சேதுபதி
*(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)*
*நெடுந்தீவு-4.* (202) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

கோண்டாவில்

## சின்னையா சிதம்பரநாதன்
(சட்டத்தரணி)

கோண்டாவில், நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மாளிகாவத்தையைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிதம்பரநாதன் 29.01.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னையா - சரஸ்வதி தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற இ.பொ.குமாரசாமி (இளைப்பாறிய அதிபர், கோண்டாவில் மகாவித்தியாலயம்) - சிவஞானம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் சிவராஜ் (லண்டன்), சிறீஸ்கந்தராஜ் (லண்டன்), வசந்தினி, சுதர்சினி, சுபாசினி (லண்டன்), பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஞானகணேசன் (பொறியியலாளர், இ.மி.சபை), சோதிநாதன் (பொறியியலாளர், லண்டன்), லலிதாம்பிகை (லண்டன்), சியாமளா (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும், ரஜீவன், ஷர்மி, சகானா, கௌசிகன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆனந்தநடராஜா, காலஞ்சென்ற சிவஞானதேவி, மகாதேவி, பத்மாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் இராசசுப்பையா பாக்கியத்தின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.02.2002) சனிக்கிழமை காலை 10.00 மணிமுதல் அவரது கொழும்பு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் 03.02.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, காலை 10.00 மணிக்கு பூதவுடல் கனத்தை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*1/3-Q புளக், பாரதி மாவத்தை,* தகவல்:
*மாளிகாவத்தை, கொழும்பு - 10,* ச.ஞானகணேசன்
*தொலைபேசி: 343913* (C-20573) (மருமகன்).

## கோவிந்தசாமி இராதாகிருஷ்ணன்

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி ஒழுங்கையைச் சேர்ந்த கோவிந்தசாமி இராதாகிருஷ்ணன் நேற்று (31.01.2002) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னார் சிவகாமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேணுகோபால் - கனகவல்லி ஆகியோரின் அன்பு மருமகனும் மாலதி, யசோதா, வரதராஜன், ரகுபதிராஜன், கோவிந்தராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.01.2002) வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*12/34, கன்னாதிட்டி ஒழுங்கை,* வே.மகேந்திரன்
*யாழ்ப்பாணம்.* (203) (மைத்துனர்)

## சின்னத்துரை சிவசுப்பிரமணியம்
(சுரார்க்கார மணியம், பிரபல புகையிலை வர்த்தகர்)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (31.01.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகனும் சிவகுமார் (பிரான்ஸ்), சிவரூபன், சிவசீலன், சிவராஜ் (சுவிஸ்), ரஜனி (இரசாயனவியற்றுறை - விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக் கழகம்), சுபாசினி (பிரான்ஸ்), சுகந்தினி (கலைப்பீட 2ஆம் வருட மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தி (பிரான்ஸ்), சிவமாலினி, கோமளாதேவி, மதிரூபன் (UNHCR), விபுலானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கந்தசாமி, நாகம்மா, நீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தவமணிதேவி, சித்திராதேவி, ஆனந்தராசா (ஜேர்மனி), சிறீதரன் (வவுனியா), இராசமணி, சிவப்பிரகாசம், மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சாஜன், சுஜித், சுஜிஸ், சுவஸ்திகன் (பிரான்ஸ்), துஸ்யந்தன், துவாரகா, நிஷாந்தன், பிரவீந், நர்சிகா, நிவேகா, நிவேதினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2002) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஆடியபாதம் வீதி,* திருமதி சி.புனிதவதி
*கொக்குவில் மேற்கு,* (மனைவி)
*கொக்குவில்.* (208)

உ
தில்லையம்பதியாள் துணை

# நெஞ்சைவிட்டகலாத நினைவஞ்சலிகள்

| 41ஆவது நாள் | | 16ஆவது ஆண்டு |
|---|---|---|
|  | |  |
| **திருமதி மாணிக்கம் சிதம்பரத்தி** | | **அமரர் மூத்தான் மாணிக்கம்** |
| 18.04.1912 - | தாயின் அரவணைப்பில் | - 15.08.1909 |
| 23.12.2001 - | ஆண்டவன் அடியில் | - 08.10.1986 |

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாக வாழ்ந்தீர்களே!
நீங்கள் மறைந்தாலும் பாசமுகம் எம் மனதைவிட்டு மறையவில்லை!

***இன்று (01.02.2002) வெள்ளிக்கிழமை*** எமது இல்லத்தில் நடைபெறுகின்ற எமது அன்புத் தாய், தந்தையரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தில்லையம்பதி,* பிரிவால் துயருறும்:
*கோண்டாவில்.* (199) மாணிக்கம் குணசிங்கம் குடும்பத்தினர்.

## கிண்ணியாவில் ஹர்த்தால்!

திருகோணமலை,பெப்.1

திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழ்கின்ற கிண்ணியா பிரதேசத்தில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆள்கடத்தல் மற்றும் பணம் வசூலித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளே இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது. ஆயினும் இத்தகைய நடவடிக்கைகளில் தாங்கள் ஈடுபட்டார்களா என்பது பற்றி விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து இதுவரையும் தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (ஐ-10)

## ஆர்ப்பாட்டம் நடத்த சிஹல உறுமய ஏற்பாடு

அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற சமாதான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் புலிகள் மீதான தடைநீக்க முயற்சியைக் கண்டித்தும் சிஹல உறுமய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. (ஐ-10)


BECON

யாழ்நகர்

Log. By: மனோகரன்

A/L 2003

ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

காலம் : நாளை (02.02.2002) சனி

நேரம்: 9.00 a.m. (184)


## பாதை திறக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவேண்டியுள்ளது. எரிபொருள்களை தாராளமாக பெற்றுக்கொள்ள முடியாமலும், பொருள்களை அநியாய விலைகொடுத்து வாங்கவும், வைத்திய வசதிகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியாமலும் உள்ளது. பல்கலைக்கழக கல்வி, வேலை வாய்ப்பு, தபால், தந்தி தொடர்புகள், மின் இணைப்பு என்பனகூட பிரச்சினைக்குள்ளாகியுள்ளது. போக்குவரத்தில் பெரும் கஷ்டங்களும் வன்னியில் வாழும் உடன்பிறப்புக்களையும உறவினர்களையும் சந்திப்பதில் இடையூறுகளும் உருவாகியுள்ளது.

ஒட்டுமொத்தமாக சொல்லப்போனால் வடபகுதி வாழ் மக்களின் வாழ்க்கைச் செலவு தரைவழிப்பாதை மூடப்பட்டமையால் வெகுவாக அதிகரித்துள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன அண்மையில் யாழ்நகருக்கு விஜயம் செய்திருந்தபோது தரைவழிப்பாதை ஒன்றை திறப்பதற்கான அவசியத்தை அவருக்கு தெளிவுபடுத்தினோம். மாங்குளம் - கிளிநொச்சி கண்டி வீதியூடாக பாதையைத் திறக்க முற்படுகின்ற வேளையில் குடாநாட்டுக்கான பாதையையும் திறப்பது சமாதான முயற்சிகளுக்கு பெரிதும் வழிவகுக்கும். இங்கிருக்கும் இராணுவத்தினர் இதனை நிச்சயம் வரவேற்பார்கள். எனவே செஞ்சிலுவை சர்வதேசக் குழு மூலமாக அல்லது அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் மூலமாக இதற்கான தகுந்த பதிலை உடன் அறிவிக்கும்படி வேண்டுகிறோம்.

பரந்தன் - இயக்கச்சி ஏ-9 தரைவழிப்பாதை பாவிக்கக்கூடியதாக உள்ளது. விடுதலைப் புலிகள் எல்லா நிலக கண்ணிகளையும் அப்பாதையிலிருந்து அப்புறப்படுத்தியுள்ளார்கள். மிருசுவிலிலிருந்து - பளைக்கான பாதைக்கும் அவ்விதமே செய்வது கடினமானதல்ல. மிகுதிப் பாதையான மிருசுவில் - யாழ்ப்பாணப் பாதை இராணுவத்தினராலும் பொதுமக்களாலும் ஏற்கனவே பாவனையில் உள்ளது.

வடபகுதி மக்களின் அவசரத் தேவையான இப்பாதை திறப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் உகந்த நேரம் இதுவாகும்.

எனவே வடபகுதி வாழ் மக்கள் அனைவர்பேராலும் மனிதாபிமான ரீதியில் இவ்வேண்டுகோளுக்கு உடன நடவடிக்கை எடுக்கும்படி தங்களை மிகவும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## இரண்டாவது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரும்வரை மறியல் போராட்டம் தொடரும் என்று தெரிவித்த மீனவர் சங்கப் பிரதிநிதி ஒருவர் -

தமது போராட்டத்துக்கு குடாநாட்டு பொதுமக்களும் ஆதரவுதர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மீனவர்களின் மறியல் போராட்டம் இன்றும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று போராட்டத்தில் கலந்துகொள்ளாத பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதி மீனவர்கள் இன்று முதல் மறியற் போராட்டத்தில் கலந்துகொள்ள உள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்தது.

(ஓ-6-9-15-51-180-ரி)


எமது புதிய வீடியோ CD வெளியீடு

முராரி

(பிரதிகள் உடன் பெறலாம்)

வீடியோ விமல்

(C/20579) யாழ்ப்பாணம்.


# உள்ளூராட்சித் தேர்தல்களை நாடு முழுக்க ஒத்தி வைக்குக!

## பொ.ஐ.முன்னணி கோருகிறது

உள்ளூராட்சித் தேர்தலை நாடு முழுவதும் ஒத்திவைக்க வேண்டுமென்று பொ.ஐ.முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்து இரண்டு மாதங்கள் கழிந்துவிட்ட போதிலும் தென்பகுதியில் தேர்தல் வன்செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் வடக்கு - கிழக்கில் மட்டுமன்றி நாடு முழுவதும் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு அரசாங்கத்தை அது கேட்டுள்ளது.

தமது கட்சியின் ஆதரவாளர்கள் மீதான வன்செயல்கள் தொடர்வதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபைத் தலைவர்கள் அதன் உறுப்பினர்கள் பலர் போலிக் குற்றச்சாட்டின்பேரில் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் பொ.ஐ.முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் மட்டும் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்தால் அதனைத் தாம் எதிர்க்கப்போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-10)

## டி.ஐ.ஜி. விரைவில் கைது!

கடந்த பொதுத் தேர்தல் நடந்த காலகட்டத்தில் தனியாருக்கு ஆயுதங்களை வழங்கியது தொடர்பாக ஜனாதிபதியின் பாதுகாப்புப் படைக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் கைதுசெய்யப்படலாம் என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ)

## அனுமதியின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் பலதரப்பட்ட பிரச்சினைகளை அமைச்சர் மகேஸ்வரன் பிரதமரிடம் எடுத்துக் கூறினார். அவற்றுக்கு பதிலளித்து பிரதமர் தெரிவித்ததாவது:-

தென்பகுதிச் சிறைகளில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் கைதிகளை விடுதலை செய்யும் விடயத்துக்கு முன்னுரிமை அளிக்கவிருக்கின்றேன். அடுத்ததாக வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தரைவழிப்பாதையை திறக்கும் விடயத்தில் கவனம் செலுத்தப்படும். அதன் பின்னர் மீன்பிடித் தடையை நீக்கும் விவகாரம் குறித்து முடிவு செய்யப்படும் - என்று பிரதமர் தெரிவித்தார்.


தகவல் தொழில் நுட்பப் பூங்கா

272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P:021-3641, E-Mail:itp@sltnet.lk

அலுவலக உத்தியோகத்தர்களின் வேண்டுகோளிற்கிணங்க...

யாழ்.மாவட்டத்தில் முதற் தடவையாக

ON LINE CLASSES



ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் தனித்தனி கணனியிலேயே நேரடி வகுப்புக்களும், பயிற்சியும்.

Course Title

- Diploma in PC Application And Office Management

(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)

Syllabus

- Computer Environment
- Ms-Word
- Ms-Excel
- Ms-Access
- Ms-Power Point

Course Fee: 2000/= only

Course Commence on 05-02-2002

Time Table (Week Days Only)

Mon to Thu - 5.00 to 7.00 pm

Duration: 3 Months

For futher Details: Information:

Course Manager Director


## அமைதித் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஒருமாதகால மோதல் தவிர்ப்பை அறிவித்திருந்தது. இப்போது அது மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சை ஆரம்பிக்க முன்னர் எமது மக்கள் அனுபவித்து வரும் வாழ்வியல் துன்பங்கள் நீக்கப்படவேண்டும் என்ற புலிகளின் நிலைப்பாட்டுக்கு இணங்கி முதல்கட்டமாக புதிய அரசு பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தியுள்ளது.

புலிகளும் தாம் அறிவித்த போர் நிறுத்தத்தை நேர்மையாகக் கடைப்பிடித்து வருவதுடன் சமாதான முயற்சிகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் போர்க்கைதிகளை விடுதலை செய்து சிங்கள அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

வன்னிக்கு வந்த காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கத்தினரை வரவேற்று பத்துப் போர்க்கைதிகளை புலிகள் விடுவித்தனர். துன்பப்பட்ட சிங்கள மக்களைக் கௌரவித்து வழி அனுப்பினோம்.

பொருளாதாரத் தடைநீக்கம், போர் நிறுத்தம், சிங்களக் கைதிகள் விடுதலை, கைதிகளின் பெற்றோரின் வன்னி விஜயம் ஆகியன சமாதானச் சூழலை உருவாக்கி பரஸ்பரம் நம்பிக்கையை ஏற்படுத்தும் ஆரம்ப முயற்சிகளேயாகும்.

ஆயினும் சமாதானப் பேச்சை ஆரம்பிக்க இவை மட்டும் போதுமானதாக இல்லை. நிரந்தரப் போர்நிறுத்தம், இராணுவ நெருக்குவாரங்கள் அகற்றப்படல், புலிகள் மீதான தடைநீக்கம் ஆகியன பேச்சு மேசைக்குச் செல்ல முன்னர் செய்யப்படவேண்டிய பணிகள் ஆகும்.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தங்கள் வாக்குகள் மூலம் சமாதானத்திற்கான ஆணையைக் கொடுத்துள்ளனர். புலிகள் இயக்கமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என தேர்தல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானம் மலரவேண்டுமென சர்வதேச சமூகம் வலியுறுத்தி நிற்கிறது. இது சமாதானத்துக்குக் கிடைத்த இறுதிச் சந்தர்ப்பம் என சிங்கள தேசத்தில் உள்ள சமாதான விரும்பிகள் வலியுறுத்துகின்றனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி., சிஹல உறுமய போன்றவையே சமாதானத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன. சிங்கள தேசத்திலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகைகளும் அதற்கு உறுதுணையாக நிற்கின்றன.

சமாதானத்துக்கு எதிரான குரலை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் எழுப்புகின்றார்.

இந்தச் சூழ்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கைகளிலேயே சமாதான முயற்சி தங்கியுள்ளது.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)


யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி ~ 2002

காலம் : நாளை (02.02.2002) சனிக்கிழமை பி.ப. 1.30 மணி

இடம் : கல்லூரி மைதானம் (மருதனார்மடம்)

தலைவர் : திரு.வே.வில்லவராயர் (பிரதி அதிபர்)

பிரதம விருந்தினர் : திரு.ஆ.வ.கணேசலிங்கம் அவர்கள் (இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)

சிறப்பு விருந்தினர் : திரு.நா.கந்தசாமி அவர்கள் (பழைய மாணவர், முன்னாள் அதிபர், யூனியன் கல்லூரி)

பரிசில் வழங்கல் : திருமதி கௌரிமனோகரி கணேசலிங்கம் அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.

(155)

D.C.M பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (ஆனைப்பந்தி சந்திக்கருகே)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு

G.A.Q ; 1st IN Com

பொருளியல் S.வரதராஜன் B.A (Hons) 2003 கல்வியாண்டு

ஆரம்பம்:- 02-02-02 சனி 1.00 மணி

குறிப்பு: 2002 பொருளியல் மாணவர்கள் ஆரம்ப பாடஅலகுகளை இப் பிரிவில் இணைந்து கற்கலாம்

தேவை

யாழ்ப்பாணப் பனங்கட்டி, இடியப்ப உரல், புழுக்கொடியல், பனாட்டு முதலிய பொருள்களை கொழும்பில் கொண்டுவந்து தரக்கூடிய வியாபாரிகள் தொடர்பு கொள்ளவும்.

R.ரூபன்,

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 078-615841

(C 20566)

விக்னா கல்வி நிறுவனம்

O/L DAY CLASS (பிரிவு 1) புதிய பாடத்திட்டம் பழைய பாடத்திட்டம்

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

Mon. to Fri. (காலை 8.30-2.00 (O.T.)

தரம் 6, 7, 8, 9, 10, 11இற்கான அனுமதிகளும் வழங்கப்படுகின்றன. (179)

MCS MOBILE NET COMPUTER SERVICES

324,பலாலி வீதி, யாழ்ப்பாணம்

இணையமொழி ஜாவா

JAVA

புதிய பிரிவு ஆரம்பம்

02.02.2002 3.00pm


## மரண அறிவித்தல்

### மனுவேற்பிள்ளை பேதுறுப்பிள்ளை

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை பேதுறுப்பிள்ளை நேற்று (31.01.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மேரிராணியின் அன்புக் கணவரும் அன்ரன் பசில் (பிரான்ஸ்), கொறற்றி றஞ்ஜினி (புனர்வாழ்வுக் கிளை - செயலகம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற றெஜினோல்ட், ஜெயசீலி (கொழும்பு), சறோஜினி (பிரான்ஸ்), நந்தினி (கொழும்பு) றஞ்ஜினி (இலங்கை வங்கி யாழ். 2 ஆம் கிளை) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலஞ்சென்ற லென்கஸ்லோஸ் (பொலிஸ் உத்தியோகத்தர்), அமிர்தநாயகம் (பிரான்ஸ்), அன்ரனைசா (பிரான்ஸ்), பாஸ்கரன் (ஜேர்மனி) சூரியகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகந்தன், டிசோஜினி, டள்சினி, டவிற்சன், சிறோமன், கெவின், நவிசன், நிதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.02.2002) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு (புதிய நேரம்) புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
10/1 சுவாட்ஸ் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(208)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.